# திராவிடநாடு




2

# கேட்டீரா சேதி!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐந்து பல்கலைக் கழகங்களைப் புதிதாக அமைக்கப் போகிறதாம் டில்லி சர்க்கார். பஞ்சாபிலுள்ள குருக்ஷேத்ரத்தில ஒன்று, ஐக்கிய மாகாணத்தில் கோரக்பூர்னுமிடத்திலும், காசியிலுமாக இரண்டு, மத்ய பிரதேசத்திலுள்ள ஜபல்பூரில் ஒன்று, உஜ்ஜயினில் விக்ரம பல்கலைக் கழகம் எனும் பெயரால் ஒன்று, பீகாரில் நாஞ்சிப் பல்கலைக் கழகம் ஆக, ஐந்து திட்டமிடப்பட்டிருக்கின்றன. காசியில் ஏற்படுத்தவிருப்பது சமஸ்கிருதப பல்கலைக்கழகமாம்! இங்கு ஏதும் இல்லையே, என்கிறீர்களா? கிடையாது.

*

சமஸ்கிருதத்துக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் அமைப்பது மட்டுமல்ல, ஒரு கமிஷன் நியமித்து எப்படி யெப்படி வளரச் செய்யலாம் என்பதையும் ஆராயப் போகிறதாம் டில்லி! 'உனக்கு நான் மட்டமோ', என்பது போல நமது 'பச்சைத் தமிழ்' சர்க்காரும் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது, கடந்த திங்களில். அதன் படி மூன்று வகுப்பிலும் சேர்ந்து 45 பேர் இருந்தாலும் போதுமாம், அந்தப் பள்ளியில் சமஸ்கிருதம் சொல்லிக் கொடுக்க வேண்டுமாம்!!

*

சிமெண்டு கிடைக்காத காரணத்தால், சர்க்காருடைய பல வேலைகள் அரைகுறையாகவே நிற்கின்றன என்று அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்! சிமெண்டு இங்கே இல்லையே ஒழிய, டில்லி வசம் ஏராளம் இருக்கிறது. உண்மையில், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்திருக்கிறார்கள். அதில் கொஞ்சம் கொடுங்களேன் என்று காமராஜர் சர்க்கார் கேட்க, "உங்களுக்கெதுக்கு சிமெண்டு? சென்னை மாகாணத்தில்தான் மூன்று ஆலைகளிருக்கிறதே!" என்று பட்டைநாமம் குழைத்துப் போட்டதாம் டில்லி. 'இங்கிருக்கும் சிமெண்டு ஆலைகள் தான நமக்கு கதி. அதனால், உற்பத்தியை அதிகமாக்கி நமக்கு உதவுமாறு முதலாளிகளுக்குத் தெரிவித்துள்ளோம' என்கிறார் அமைச்சர்! சென்னைக்கு அனுப்பாததைப்போல டில்லி வேறெந்த மாகாணத்துக்கும் அனுப்பவில்லையோ என்று கேட்கிறீர்களா? அனுப்பியுள்ளது. சென்னைக்கு மட்டும்தான், நாமம்!

*

படாஸ்கர் என்று ஒரு மந்திரி இருக்கிறாரல்லவா டில்லியில்? அவருக்கு அடிக்கிறது யோகம்! இதுவரையில் சாதாரண மந்திரியாக இருந்த அவர், பெரிய மந்திரியாக நியமிக்கப்படப் போகிறாராம். இவர் ஒரு மராட்டியர். தேஷ்முக்கைப்போல மராட்டியர்களுக்காக வாதாடிக்கொண்டும் அதே சமயத்தில் மந்திரிப் பதவியை விடாமலும் இருந்து கொண்டிருந்தார். இப்போது இவருக்கு பதவி உயர்வு தரப் படுகிறது நேருவால்! கொஞ்சம் ஏறுமாறாக நடந்த தியாகி என்பவரை முன்பு மந்திரிசபையில் பிடித்துப்போட்டார், நேரு. இப்போது, இவர்.

*

'ஆட்சியா நடக்கிறது ஆட்சி?' என்று காங்கிரஸ் சர்க்காரைப் பற்றி காரசாரமாகத் தாக்கிக் கட்டுரைகள் எழுதி வருகிறாராம் ஜகத்நாராயண்! சில திங்களுக்கு முன்பு இவரும் ஒரு மந்திரியாகயிருந்தவர் என்பதால் மந்திரி சபையின் ஊழல்களை அப்பட்டமாக எழுதுகிறாரா. அதோடு தானும் தன சகாக்களும் இனி மேல் காங்கிரசிலிருக்க முடியாதெனச் சொல்லி, ராஜினமாவும் செய்துவிட்டாராம். அவரது கட்டுரைகளில் இப்போது தீப்பொறி பறக்கிறதாம்! இதைக் கண்ட காங்கிரஸ் மேலிடம், இப்போது ஜகத்நாராயணனிடம் ஓடி, "இப்படி ராஜினமா செய்யலாமா!" என்று தாஜா செய்கிறதாம். இது பஞ்சாபில் நடக்கிறது.

*

பவநகர் இளவரசர் ஆகஸ்டு 15 அன்று விடுதலை செய்யப் பட்டார்! இவர், இங்கு முன்பு கவர்னராக இருந்த பவநகர் மன்னரின் மகன். பெயர் நிர்மல குமார். பெரிய கொள்ளைக்காரன் என்பதால் இவருக்கு ஆறாண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டு, சிறைவாசம் வழங்கப் பட்டிருந்தது. நன்னடத்தையுடன் இவரிருந்ததை முன்னிட்டுத் தண்டனை காலத்துக்கு முன்பே, விடுவிக்கப்பட்டிருக்கிறார், ராஜ்கோட் சிறையிலிருந்து. பழைய கவர்னரின் மகன் இவர்! கொள்ளைமட்டு மல்லவாம், பயங்கர தாக்குதல்களில்கூடப் பங்கு கொண்டிருந்தாராம், இந்த மன்னர் மகன்!

*

கோடி கோடியாகக் கொட்டிக் கட்டப்படுகிறதல்லவா தமோதர் நதி அணைக்கட்டு. அங்கு பணிபுரிந்து வந்த 5-பேர், கடந்த 14-ந் தேதி முதல் உண்ணாவிரதம் இருக்கிறார்களாம். காரணம், வேலைக்கு எடுத்துக்கொள்பவர்களைத் திடீர் திடீரென்று வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்களாம், நிர்வாகிகள். அதனால், "வீதியில் அலைகிறோம். எங்களை இப்படியெல்லாம் நிறுத்துவதில்லையென்று உறுதிமொழி தாருங்கள்" என்று கோரியே உண்ணாவிரதம் இருக்கிறார்களாம். எத்தனையோ கோடி ரூபாய்கள், 'ஏப்பம்' விடப்படுகிறது பெரியவர்களால்! ஆனால், ஏழைகளின் தலையில்தான் கைவைக்கிறார்கள் சிக்கனத்தின் பேரால்!

★

# புதிய ஆபத்து

மலர் 15 ]   [illegible] 7   [26-8-56]   தனிப் பிரதி 2 அணா   [ இதழ் 8

இலட்சக் கணக்கில் உள்ள கைத்தறி நெசவாளர் களின் வாழ்வுக்கு ஒரு பயங்கரமான 'பேரிடி' வருகிறது.

புயலின் கொடுமையும் பூகம்பத்தின் கோரமும் செய்யக் கூடிய பயங்கரமான கேட்டினைவிடப் மிகப் பெரும் அளவான கேடு வந்து தாக்கும் நிலை வருகிறது.

குடும்பம் குடும்பமாக வேலையிழந்து, வேறு நாதியற்று ஊரூரும் கூலி கிடைக்குமா என்று தேடித் தேடித் திரிந்து, எலும்புந் தோலுமாகி, மனைவி இறந்துபட்டது கண்டு, அவளைப் புதைத்திடும் குழி வெட்டுவதற்கும் மண் வெட்டி எடுத்திடும் வலிவற்று, கண்ணீர் வெள்ளம் பெருக்கி நிற்கும் கணவனையும், தாயின் தத்தளிப்புக் கண்டு கதறும் சேயினையும், தமிழகம் கண்டு கலங்கிடத் தக்கதோர், பேராபத்து வர இருக்கிறது—வந்துகொண்டே இருக்கிறது.

பெற்றெடுத்த குழந்தை துரும்பாகிப் போகக் கண்டு, "கட்டிக் கரும்பே! தங்க அரும்பே!" என்று கொஞ்சி வளர்த்த தாயே, பாவி நான் உன்னை வளர்த்திடும் வகையும் அற்றுப்போனேனடா! பாலகனே! உன்னைச் சாகாமல் காப்பாற்றும் சக்தி இழந்து போனேனடா! எங்காவது சென்று பிழைத்துக்கொள்! என்று கூறி எட்டணாவுக்கும் ஒரு ரூபாய்க்கும் குழந்தைகளைக் கூவிக் கூவி விற்றிடும் கொடுமையைத் தமிழகம் காண நேரிடும் — அதற்கான சூழ்நிலையை, வா! வா! என்று வருந்தி வருந்தி அழைக்கிருர்கள், துரைத்தனத்தார்.

தோணியிலேறிச் சென்றுகொண்டிருக்கும் பரிதாபத்துக்குரிய மக்களை, தாக்கி சாகடிக்க, நீர் மூழ்கிக் கப்பல் வருகிறது என்று 'படம்' போட்டுக் காட்டியிருக்கிறது, 'கல்கி.'

கைத்தறி நெசவாளர்கள் கஷடங்களை அனுபவிப்பதற்கென்றே இருக்கும் 'பிறவிக'ளாகி விட்டனர்.

குற்றமற்ற தொழில், நேர்த்தியான தொழில், கைவண்ணம் காட்டத்தக்க தொழில் என்று பூரிப்புடன் பேசிடக் கேட்டு, இலட்சக்கணக்கானவர்கள், கைத்தறியையே, வாழ்க்கைக்கு வழியாகக்கொண்டு விட்டனர்.

அது தீதான தொழில், தேவையற்றது, நீடித்து நிற்க முடியாதது, என்று காங்கிரசாட்சி ஒரே அடியாகச் சொல்லி விட்டிருக்கலாம்—ஒரே வெட்டுப்போட்டு இரத்தக் கறையை ஆமதாபாத் வேட்டியிலேர, ஷோலாப்பூர் சேலையிலோ, துடைத்து விட்டு, வந்தேமாதரம் பாடி விட்டு, தமது தேசீயத் திருவிளையாடலை நிறுத்திக்கொண்டு விடலாம்.

ஆனால் ஆளவந்தார்களோ, மெள்ள மெள்ளக் கொல்லுகிருர்கள், சிறிது சிறிதாகச் சித்திரவதை செய்கிருர்கள், அங்கம் அங்கமாகத் துண்டிக்கிருர்கள், கொலை பாதகத்திலும் ஒரு தனிவிதமான கொடுமையைக் கண்டறிந்து புகுத்துகிருர்கள்.

நூல் இல்லை—என்ருேர் நாள் கூறுவர்—நொந்து கிடப்பான் நெசவாளி.

நூல் உண்டு, வேலைக்குத்தக்க கூலி கிடைக்காது என்ருேர் நாள் நிலை வளரும்—தலைமீது கைவைத்துத் தேம்புவான் நெசவாளி.

ஆடைகள் மலைமலையாகக் குவிந்துள்ளன, வாங்குவதற்கு ஆள் இல்லை என்ருேர் நாள் கூறிக் கையை விரிப்பர் "அந்தோ, எம் கதி என்ன?" என்று அழுது கேட்பர் நெசவாளர்.

தோள் மீது கைத்தறி ஆடைகளைச் சுமந்துகொண்டு தெருத் தெருவாகச் சுற்றி விற்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர், நெசவாளர் தம் கண்ணீர் துடைத்திட முயன்றனர். அதுபோது, நெசவாளர் நிலைமையினை நேரிடையாக காண நேரிட்டது; கண்ணீர் கொப்பளித்தது; கவலை குடைந்தது; அச்சம் புகுந்தது.

இவர்களை இன்றைய ஆட்சியாளர்கள் வாழவிட மாட்டார்; ஆலை அரசர்களின் ஏவலைச் செய்து தீர வேண்டியவர்களாகிவிட்ட ஆளவந்தார்கள், ஏழை அழுத கண்ணீருக்கு இரக்கம் காட்டமாட்டார்கள்; கொடுமை செய்து செய்து, சித்திரவதைக்கு ஆளாக்கி ஆளாக்கி, கைத்தறி நெசவாளர்களைப் பூண்டோடு அழித்தொழித்து விடுவர் என்று அச்சம் கொண்டோம். கொண்ட அச்சம், காரணமற்றதல்ல, என்பது இப்போது விளக்கமாகிவிட்டது; ஒரு முழக் கயிறுதரத் தீர்மானித்துவிட்டது அரசு!

எமக்குப் போதுமான அளவு நூல்கிடைக்கச் செய்யுங்கள், வாழ்க்கைக்குப் போதுமான அளவு கூலி கிடைக்க வழி காட்டுங்கள், கைத்தறி ஆடைகள் தேங்கிவிடாமல் விற்பனையாவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கைத்தறியாளர்கள், கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டனர்.

நூல் ஆலைக்குப் போகிறது—ஆலை, ஆடைகளை மலைமலையாகக் குவிக்கிறது—ஆலை ஆடை மினுமினுப்பும் விலை மலிவும் கொண்டதாக அங்காடி வருகிறது, ஆலை ஆடைகளை மக்கள் வாங்கத் தூண்டும் வசீகரம் தரும் விளம்பரம், கண்ணைப் பறிக்கிறது; கைத்தறி நெசவாளரின் கண்களிலே நீர் கொப்புளிக்கிறது; உடலில் இரத்தம் சுண்டிவிடுகிறது; உயிர் ஊசலாடுகிறது.

இது கைத்தறி நெசவாளருக்குக் 'காலாகாலமாக' இருந்துகொண்டு வரும் ஆபத்து.

ஆச்சாரியார் துணிவுடன் இதற்குப் பரிகாரம் சொன்னர். அமைச்சர் அவையில் இருந்தபோது; எல்லாக் கட்சிகளும் அவருடைய திட்டத்தை ஆதரித்தன; நாடு வரவேற்றது; நெசவாளர் மகிழ்ந்தனர் **டில்லி நிராகரித்தது!**

கரைபோட்ட வேட்டியும் சேலையும் மட்டுமாவது, கைத்தறிக்கு என்று விட்டுவிடுவது. ஆலைகளில் இந்த ரகங்கள் தயாராவதைத் தடுத்திடுவது—என்பது ஆச்சாரியார் திட்டம்.

ஆச்சாரியாரிடம் டில்லிக்குப் பெருமதிப்பு உண்டு, ஆனால் ஆலைமுதளாளிகளிடம் அச்சம்அதிகம். எனவே ஆச்சாரியாரின் திட்டம் கவனிப்பாரற்றுப் போய்விட்டது.

ஆச்சாரியாருடைய அரசியல் வாழ்வில், இதுபோன்ற கொடுமையான 'அவமதிப்பு' அவருக்கு இதற்குமுன் அவருடைய சொந்தக் கட்சி மூலம் ஏற்பட்டதில்லை என்று கூறலாம்.

அவர் வேதாந்தி, இதனையும் தாங்கிக்கொள்வார், இதனினும் கொடிய அவமதிப்பையும் தாங்கிகொள்வார் என்று கீதை அறிந்தோர் கூறுவர். பிரச்சினை, ஆச்சாரியாருடைய தன்மதிப்பு என்ன ஆயிற்று என்பதல்ல; கைத்தறியாளரின்கதி என்ன ஆவது என்பதுதான்.

அதற்கு இப்போது ஒருவழி கண்டுபிடித்துவிட்டார்கள் துரைத்தனத்தார்!

**ஒழிந்துபோ! என்று கூறுகிறார்கள் போகுமுன்பு, உன் ஊர் பெயர் விவரம் கூறிவிட்டு செத்துத் தொலை என்கிறார்கள்.**

இலட்சக் கணக்கான நெசவாளர்கள் ஈடுபட்டுள்ள கைத்தறித் தொழிலில், விசைத்தறியைப் புகுத்தத் திட்டமிட்டுவிட்டனர்; அதனைத் துரிதமாகவும், துடுக்குத்தனமாகவும் அமுல் நடத்தத் துணிந்துவிட்டனர்.

விசைத்தறி, சிறு முதலாளிகளின் பிழைக்கும் வழியாகிவிடும்.

இதன் மூலமாக, இலட்சக் கணக்கான கைத்தறி நெசவாளர்களின் பிழைப்பில் மண்விழும் — அவர்கள் ஒரு முழக் கயிறு தேடிக்கொள்ள வேண்டியதாகிவிடும்.

விசைத்தறி புகுந்து, கைத்தறியாளர்களை ஒழித்துக்கட்டுவதற்குள், கைத்தறியாளர்கள், காரணம்கணக்கு காட்டி, தாங்கள் கைத்தறியாளர்கள் தான் என்பதைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

இதற்காக அதிகாரிகளிடம் மண்டியிட வேண்டிவரும் — சொல்லத் தேவையில்லை.

கைத்தறி நெசவாளர்கள், கணக்குக் காட்டவேண்டுமாம்!

கள்ள மார்க்கட் பணத்துக்கு ஒரு கணக்கும், இலஞ்ச இலாவணம் கொடுத்ததற்கான இரகசியக் கணக்கும் வைத்துக்கொண்டிருக்கும், பெரிய முதலாளிகளல்லவா—அதனால் கணக்கு காட்டச் சொல்கிறது காங்கிரஸ் அரசு.

பதிவு செய்யும் முறையையும் விசைத்தறி புகுத்துவதையும் தம்மை அழித்திடவரும பேராபத்து என்பதை உணர்ந்து கைத்தறி நெசவாளர்கள் உள்ளம் துடிக்கின்றனர். ஊராள்வோரிடம் முறையிடுகின்றனர்—அவர்களோ, விசைத்தறி உங்களை ஒழிக்காது, ஏன் அஞ்சுகிறீர்கள் என்று சாகசம் பேசுகின்றனர்.

காஞ்சிபுரத்தில் இதற்கென நடைபெற்ற மாநாட்டிலே, விசைத் தறித் திட்டம் கண்டிக்கப்பட்டது.

சேலம் வட்டாரத்தில் உள்ள பல்வேறு நெசவாளர்கள் அமைப்பும், விசைத் தறித் திட்டத்தைக் கண்டித்துள்ளன.

சோமப்பா எனும், கைத்தறித் தொழில் துறை நிபுணர், பலமாகக் கண்டித்துள்ளார்.

கிளர்ச்சி! கிளர்ச்சி! கிளர்ச்சி! என்று கூறி, கைத்தறியாளர்களுக்கு வர இருக்கும் ஆபத்தை எதிர்த்தொழிக்குமாறு ஆச்சாரியார், பிரகடகோட்டய்யா என்பாருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

வினோபா, ஏன் இந்த சர்க்காருக்கு இப்படி ஒரு விபரீத புத்தி ஏற்பட்டிருக்கிறது? என்று கேட்டு விசாரப்படுகிறார்.

கம்யூனிஸ்டு கட்சி கண்டிக்கிறது.

பிரஜா — சோஷியலிஸ்டு விசைத்தறித் திட்டம் நெசவாளருக்கு ஆபத்தானது என்று கூறுகிறது.

நெசவாளர் பிரச்சினையில் அன்பும் அக்கரையும் கொண்ட அனைவரும், விசைத் தறி புகுத்துவதைக் கண்டிக்கின்றனர்.

> விஞ்ஞான வளர்ச்சியை எதிர்க்கலாமா? காலமெலாம் கைத்தறித் தொழிலையே நம்பி வாழ முடியுமா? காலப்போக்குக்கு ஏற்ப மாறவேண்டாமா?

என்று கேட்டு, 'நவயுக' ஆதரவாளர்கள் என்று தம்மைக் காட்டிக்கொள்கின்றனர் சிலர்.

> விசைத் தறியைப் புகுத்தலாகாது என்று கூறுபவர்கள்.
>
> இயந்திரத்துக்கு விரோதிகளல்ல.
>
> விஞ்ஞான வளர்ச்சியில் அக்கரை கொள்ளாதவர்களல்ல.
>
> காலம் மாறும் என்ற உண்மையை அறியாதவர்களல்ல.

**விசைத்தறி உடனடியாக இலட்சக் கணக்கான மக்களை வேலை இழக்கச் செய்யும்.**

**வேலை இழக்க நேரிடும் கைத்தறி நெசவாளர்கள், தமது திறமை முழுவதையும் இந்த ஒரு துறைக்கே தந்து நிபுணர்களாகி இருக்கின்றனர்—அந்தத் தொழில் திறமை பாழாகிறது.**

**வேலை இழந்திடும் இலட்சக்கணக்கான, கைத்தறி நெசவாளர்களுக்கு வேறு தொழில் தரும் திட்டம் சர்க்காரிடம் இல்லை.**

**விசைத்தறித் திட்டத்தால், வேலை இழக்க நேரிடும் கைத்தறி நெசவாளர்களுக்கு கொலை கொள்ளை செய்யும் கெடுமதியும் அதற்குத் தேவையான துணிவும், இரக்கமற்ற நெஞ்சும் கிடையாது.**

**எனவே அவர்களுக்கு தற்கொலை தான் ஒரே வழியாக அமைகிறது.**

விசைத்தறித் திட்டம், சர்க்காரால் பிடிவாதமாகப் புகுத்தப்பட்டால், தமிழகத்தில் கோரக் காட்சிகள் தென்படும்.

**"அவர்களுடைய அழுகுரல் வெகு தூரத்திலுள்ள தில்லி சர்க்காரின் செவிகளுக்கு எட்டுமா? சென்னை சர்க்காராவது கருணை கூர்ந்து அவர்களுக்குப் பரிந்து பேசுவார்களா?" என்று கல்கி கேட்கிறது.**

தமிழகத்தை நோக்கி வந்துகொண்டிருக்கும் இந்தப் பேராபத்தினின்றும் கைத்தறி நெசவாளர் சமூகத்தைக் காப்பாற்ற வேண்டியபொறுப்பு, நேர்மை உள்ளம் படைத்த எல்லா அரசியல் கட்சிகளையும் சார்ந்ததாகும்.

கட்சி என்ற பாசமோ, வேறு எந்த விதமான நேசமோ குறுக்கிட இடமளிக்கக் கூடாது.

ஏழை ஏக்கத்துடன் பார்க்கிறான்; அவன் எதிர்காலம் இருண்டு வருகிறது; என் கதி என்ன? என்று கேட்டுக் கதறுகிறான்!

இதோ!—என்று கூறி கைகொடுக்கும், கடமை உணர்ச்சிகொண்டோரனைவரும் ஒன்றுகூட வேண்டும்—நாட்டு மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் — பெரியதோர் கிளர்ச்சி நடத்தியேனும், இந்தப் பேராபத்தைப் போக்க வேண்டும். இல்லையேல் ......... எண்ணிடவே பயமாகத்தான் இருக்கிறது.

★

# மண்டப மாநாடு

**"உலகத்தின் க்ஷேமத்தைக் கருதியே வேதங்கள் தோன்றின.**

**வேதங்களின் ஒலியைக் கேட்பதே இனிமையானது மங்களகரமானது. பொருளறிந்து அதைக் கற்பது மிகவும் சிறந்ததாகும்"**

அக்னிஹோத்ரம் நாராயண தாத்தாச்சாரியார் எனும் 'பிராமணோத்தமர்' நாவல் பாக்கம் எனும் சிற்றூரில், பெருமாள் கோயிலில் இந்தத் திங்கள், வேத பாராயணத்தைத் துவக்கி வைத்து, இதுபோலப் பேசினார் என்ற 'செய்தியை' உலகப் பெரும் போர் மூளாதிருக்க வேண்டும் என்பதற்காகப் பல நாட்டு அரசுத் தலைவர்கள் அரும்பாடுபட்டு வரும் செய்திக்கு அளிக்கப்படும் இடத்துக்கு ஈடான இடமளித்து ஆகஸ்ட் இருபது 'மித்திரன்' அன்புடன் வெளியிட்டிருக்கிறது.

உலகிலே அமைதிக் குறைவும், மக்கள் வாழ்க்கையிலே அவல நிலையும் ஏற்பட்டிருப்பது எங்ஙனம் போக்கப்பட்டு, பொற் காலம் எழச் செய்வது என்பது பற்றிய கவலை மிகுந்திருக்கும் நாட்களில், யாரோ ஒரு தாத்தாச்சாரியாருக்கு, வேத ஒலியின் மகிமையை எண்ணும்போதே இனிமை ஏற்படட்டும்—உலகச் சேதிகளை ஊருக்கு அறிவித்து, மக்களை புது உலகுக்கு ஏற்றவர்களாக்கும் பொறுப்பினைக் கவனிக்கவேண்டிய 'நாளிதழ்' ஏன் இதுகுறித்து இத்துணை அக்கரை காட்டவேண்டும்!

தாத்தாச்சாரியார் கோயிலில் பேசுகிறார்—ஐயங்கார் பத்திரிகையில் அதனைக் கவர்ச்சிகரமான தலைப்புகளுடன் வெளியிடுகிறார், என்பதன்றி, வேறென்ன புரிகிறது.

வேத ஒலி கேட்பதிலேயே ஓர் இனிமை இருக்கிறது என்பதிலே அடியோடு உண்மையே இல்லை என்று கூறிவிடுவதற்கில்லை. வேத பாராயணம் செய்தான பிறகு, அவர்களுக்குக் கிடைக்கும் முந்திரியும் நெய்யும், திராட்சையும் சீனியும் குழைந்து சுவை சொட்டச் சொட்டச் செய்யப்படும் சர்க்கரைப் பொங்கலும், அளவுடன் மிளகும் தாராளமாக நெய்யும் கலந்து பதமாகச் செய்யப்படும் வெண்பொங்கலும், பிற 'பிரசாதங்களும்' சுவை தருவனவன்றோ!

உண்டோர் கூறுவர், சுவையின் பெருமையை!

தாத்தாச்சாரியார், வேத ஒலி கேட்பதிலேயே ஓர் இனிமை இருக்கிறது என்பது இந்த வகையிலே பொருளுள்ளதுதான்.

**சி. என். ஏ.**

'உலக க்ஷேமம்' வேதத்தின் நோக்கம் என்கிறார்.

'க்ஷேமம்' என்பதற்கு வேத காலத்துப் பொருள் வேறு என்பது மட்டுமல்ல, வேதகாலம் தெரிந்திருந்த உலகமே வேறு!

அவனவன், அவனவனுக்கென்று அயன் வகுத்த வழிப்படி நின்று, வாழ்க்கை நடாத்தி வருவதே, வேதகால 'க்ஷேமம்'!

'பிராமணன்' பாடுபடலாகாது—ஏர்பிடித்தல் கூடாது —வாணிபம் செய்தல் தகாது—ஓத ஓதுவிக்க—வேள்வி நடத்த நடத்துவிக்க; இப்படிப்பட்ட இகபரசுகத்துக்கான 'தேவகாரியத்தில்' ஈடுபடவேண்டும்! அவன் அந்தக் காரியத்தை முட்டின்றி முடித்திட, மற்றையோர், மார்புடையப் பாடுபல பட்டு, பலனைத் தமக் காக்கிக்கொள்ளாமல், தானமாகவும் தட்சணையாகவும், காணிக்கையாகவும் வரியாகவும் கொடுத்துவிட்டு, வறுமை கொட்டினாலும், வாட்டம் தாக்கினாலும் "வர இருக்கும்" சொர்க்கவாசம் பற்றி எண்ணிக்கொண்டிருக்க வேண்டும்! இது வேதகாலத்தில், 'க்ஷேமம்' என்பதற்கு நடைமுறையில் இருந்து வந்த பொருள்.

இனி 'உலகம்' என்பது பற்றி எண்ணிப் பார்க்கும்போதோ கை கொட்டிச் சிரிக்கத் தோன்றும்.

வேதகால 'உலகம்' அமெரிக்கா' ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா' சீனா, ஐரோப்பா, ஆசியா என்பவைகள் கொண்டது அல்ல.

அட்லான்டிக், பசிபிக், ஆர்க்டிக் என்பன போன்ற கடல்களைக் கொண்டதல்ல.

நைல், தேம்ஸ், அமேசான், போன்ற நதிகள் கொண்டதல்ல.

ஆல்ப்ஸ், போன்ற மலைகளை வேதகால உலகில்காணமுடியாது.

கீழே ஏழு, மேலே ஏழு, பாற்கடல் நெய்க்கடல். தயிர்க்கடல்!—இவ்வளவுதான்.

இந்த வேதகால உலகுக்கும் இன்றைய உலகுக்கும் உள்ள வித்தியாசம் ஒன்று போதும், வேதகால அறிவு இந்தக்கால

வாழ்க்கைக்கு எவ்வளவு கவைக்குதவாத கூளம் என்பதை விளக்க.

எனினும் ஒரு தாத்தாச்சாரியார் இதுபற்றிப் பேசுகிறார்; ஒரு ஐயங்கார் இதனை அகில உலகச் செய்திகளைத் தாங்கிவரும் நாளிதழில் அக்கரையுடன் வெளியிடுகிறார்.

வேதத்தின் அருமை பெருமைகளைப்பற்றி, தக்கவிதமாகப் பிரசாரம் செய்தால், மீண்டும், அந்தக் காலம் துளிர்த்திடச் செய்ய முடியும் என்று கருதுகின்றனர், இத்தகையோர்.

உலகு போகும் போக்கினையும், உண்மை அறிவு எவ்வழி காட்டுகிறது என்பதனையும் இன்னமும் உணராத, உணரும் வாய்ப்பினைப் பெறாத பாமரர் ஏராளமாக உள்ளனர் என்ற ஒரே தைரியத்தால், சூயஸ் மாநாடும், ஐந்தாண்டுத் திட்ட அலுவலும், செயற்கை மழை பெய்விக்கும் ஏற்பாடும், அணுவினை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தும் முறை குறித்த ஆராய்ச்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாட்களில், வேத ஒலியிலே இனிமையும் அதன் பொருளிலே அருமையும் இருக்கிறது என்று எடுத்துக்கூறும் 'மண்டப மாநாடு' நடத்துகின்றனர்.

வேதத்தைக் கட்டிக் காத்து வரும் உரிமையை ஆண்டவனிடமிருந்து பெற்ற குலம் என்று எந்தப் பார்ப்பன குலத்தைப் பற்றிப் பேசித் திரிகிறார்களோ, அந்தக் 'குலம்' வேதம் ஓதிக்கொண்டும், அதன் ஒலியில் இனிமை கண்டு மகிழ்ந்தும், பிற எந்த அலுவலையும் அந்தஸ்தையும் துச்சமென்று வெறுத்து ஒதுக்கிவிட்டும், வாழ்ந்து வருகிறதா, என்றால், ஒரோர் வேளைகளில் இதுபோல் சில அக்னி ஹோத்திரங்களும், பிரதிவாதி பயங்கரங்களும், வேதத்தின் மகிமை பற்றிப் பேசுவதன்றி, வேதகால வாழ்க்கையினைத் தேடிப் பெறுவோம், கண் சிமிட்டிக் காமமூட்டும், சர்க்கார் அலுவல்களைக் கண்ணெடுத்தும் பாரோம், தொழில் நிலைய அலுவல்களைத் தொடோம், பிழைக்கும் வழியாக உள்ள பல்வேறு தொழில்கள் எதிலும் நாட்டம் கொள்ளோம், 'பவதீ பிக்ஷாந் தேஹி' என்ற முறைப்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்வோம்—என்று எவரும் நடந்து கொள்வதில்லை; அவர்கள் அதுபோல் நடந்து கொள்வதில்லையே என்று மடிசஞ்சிகள் கூடக் கவலைகொண்டு, கண்டித்து, அவர்களை நல்வழிப்படுத்த முனைவதில்லை. ஆனால் 'மண்டப மாநாடு' களிலே மட்டும், மாரடித்து அழுது காட்டுவர், மகாசிரேஷ்டமானது வேதம்—அதன் ஒலியே இன்பம்—அதன் பொருளே மகிமை — என்றெல்லாம்.

உலகம் போகும் போக்குத்தெளிவாகத் தெரியாமலிருக்கும் பாமர மக்களுக்குங்கூட, பார்ப்பனர், வேதத்தின் அருமை பற்றிப் பேசுவதும், வேதகால மேன்மைபற்றிக் கதைப்பதும், 'ஊருக்கு உபதேசமாக' 'ஏட்டுச்சுரையாக' இருப்பதையும், நடைமுறையில், சகல தொழில்களிலும், ஈடுபட்டு, வசதி தேடி, ஆதிக்கம் பெற்றிடவே, பார்ப்பன சமூகம் முனைந்து நின்று வெற்றிபெற்று வருவதும், புரிந்துவிட்டது. எனவே, இத்தகைய 'மண்டப மாநாடு'பற்றிச் செய்திகள் வெளியிடப்படும்போது, கேலியாகத்தான் பார்க்கின்றனர்.

பார்ப்பன குலத்தின் பாது காவலர் என்று தம்மைத்தாமே கருதிக்கொண்டுள்ள சிலர், பன்னிப் பன்னிப் பேசுவதன் மூலம், பழைமைக்கு மீண்டும் 'பீடம்' கிடைத்திடச் செய்யலாம் என்று பகற்கனவு காண்கின்றனர்.

(16-ம் பக்கம் பார்க்க)

# பயங்கரப் பள்ளத்தாக்கு

உலகம் கண்டு வியக்கிறது நாம் கட்டும் அணைகளைக் கண்டு.

உள்ளம் பூரித்துப் பாராட்டுகிறார்கள் ஐந்தாண்டுத் திட்ட வெற்றி கண்டு.

பாரத சர்க்காரின் திறமையைப் பாரிலே புகழாதார் இல்லை!

இது ஐந்தாண்டுத் திட்ட பிரசாரக் குழுவின் 'பஜனை'

இதோ, பாரத சர்க்காரின் திறமைக் குறைவினால் ஏற்பட்டுள்ள பயங்கரப் பள்ளத்தாக்கு!!

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் — பிரம்மாண்டமானது என்று விளம்பரம் கூறுகிறது— இதிலே ஏற்பட்டுள்ள ஊழல்களோ, நாற்றம் கிளப்புகிறது— சர்க்காரே நியமித்துள்ள தணிக்கையாளர்கள்,

திறமைக் குறைவு
ஒழுங்கீனம்
கணக்குக் கோளாறு
முறைதவறு
இலஞ்சப்புகார்

எனும் பல்வேறு கேடுபாடுகள் மலிந்திருப்பதை அவ்வப்போது எடுத்துக் காட்டுகின்றனர்; திருத்துக! தூய்மைப்படுத்துக! என்று இடித்துரைக்கின்றனர்.

1952—53-ல், தாமோதர் திட்டத்துக்கான செங்கல் உற்பத்திச் செலவில் மட்டும் 4-இலட்சம் ரூபாய்வரை கணக்கு ஒழுங்காக இல்லை, என்கின்றனர் தணிக்கையாளர்.

'டெண்டர்' இன்றி இப்போது 7-இலட்ச ரூபாய் செலவிட்டிருப்பது, ஒழுங்கீனம் என்று தணிக்கையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பல்வேறு வகைக் கணக்குகளில், ஒழுங்கீனம், ஊழல், திறமைக் குறைவு எனும் காரணங்களால் சுமார் 18-இலட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்டினர்.

சோடி கோடியாகப் பணம் போட்டு வாங்கிச் சாமான்களைக் கொட்டிவைத்திருக்கிறார்கள் களஞ்சியத்தில்.

இந்தக் களஞ்சியக் கணக்கு ஒழுங்காக இல்லை என்று தணிக்கையாளர் கூறுகின்றனர்.

பாரத சர்க்காரின் திறமைக் குறைவால் ஏற்பட்டுள்ள இந்த பயங்கரப் பள்ளத்தாக்கு பற்றி மக்கள் என்ன எண்ணுவார்கள்!

★

காஞ்சீபுரம்

26—8—'56

# தம்பி !

"திருநெல்வேலியில் பருவமழை தவறியிருக்கிறது; விவசாயிகள் பரிதாப நிலையில் இருக்கிறார்கள். சங்கரன் கோயில் தாலுகாவில், சிவகிரி பகுதியில், நாங்குனேரியில் பெரும்பகுதி வரட்சி ஏற்பட்டிருக்கிறது. இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்ட மக்கள் ஏராளமானபேர் திருநெல்வேலி இராமநாதபுரம் ஜில்லாக்களில் கஷ்ட நிலையில் இருக்கிறார்கள்" என்று செல்வராஜ் எனும் காங்கிரஸ் எம். எல். ஏ. இப்போது நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

பொதுத் தேர்தல் நெருங்குகிறது. பொதுமக்களை மீண்டும் கண்டு, 'ஐயா! அப்பா!' என்று ஓட்டு கேட்க வேண்டுமே. "ஆமய்யா M.L.A., அங்கே போய் முன்பு அமர்ந்திருந்தீரே, என்ன சாதித்து விட்டீர்?" என்று யாராவது கேட்டுவிட்டால், "நமது மக்கள் ஆலாய்ப் பறக்கிறார்கள், ஆட்சியாளர்கள் தக்க பரிகாரம் தேடவேண்டும் என்று அடித்துப் பேசினேன் அன்பரே! இடித்துரைத்தேன் நண்பரே! இதோ "இந்து" பார்த்திடுக! இதோ "மித்திரன்" படித்திடுக!"—என்று எடுத்துக்காட்டி, இளித்து நிற்க இது உதவட்டும் என்பதற்காகவே இந்த M.L.A., இவ்விதம் சட்டசபையில் பேசினார், என்று ஏளனம் செய்யாதே, தம்பி! காரணம் எதுவாகவேனும் இருக்கட்டும், காங்கிரசாட்சியின் 'கோணலை' ஒரு காங்கிரஸ் பிரமுகர் எடுத்துக் கூறுகிறார் —எனவே இந்த ஆட்சியின் அலட்சணத்தை நாம் வேண்டுமென்றே (நன்றி மறந்து!) கண்டிக்கிறோமென்று குற்றம் சுமத்துபவர்களின் வாய்க்கு ஆப்பாகவாவது இது பயன்படுமல்லவா? அந்தத்திருப்தி எனக்கு.

திருநெல்வேலிச் சீமையே வளம் குன்றித் திண்டாடுகிறது. — தேயிலைக் காட்டிலே பாடுபட்டு எலும்புந் தோலுமாகி, அந்தப்பிழைப்பின் வாயிலும் மண் விழுந்ததால் அவதிப்பட்ட மக்கள் வேறு, வாழவழி கேட்டுக்கொண்டு வரட்சியால் வாட்டப்படும் நெல்லைச் சீமைக்கு வந்துள்ளனர்.

ஆட்சியாளர்கள் இந்த அவதி துடைத்திடுவோம் என்று உறுதி அளிக்கக் காணோம் — அதற்கான திட்டம் தீட்டுவதாகவும் தெரியவில்லை — அப்படி ஒரு பிரச்சினை இருப்பதை அவர்கள் ஒப்புக்கொள்வதாகவும் தெரியக்காணோம்.

"கோயமுத்தூர் ஜில்லாவில் மாத்திரம் 12-ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் கிடையாது" என்று வி. கே. பழனிச்சாமிக் கவுண்டர் எனும் காங்கிரஸ் M.L.A. அதே சட்டசபையில் கூறுகிறார்.

# பேரகராதி

*கோவை, மாவட்டம் காங்கிரசுக்குத் தேர்தல் செலவுக்குத் தயாராக இருக்கும் பணப்பெட்டி. தொழிலதிபர்களின் கோட்டம். இங்கு டாக்டரில்லா ஆஸ்பத்திரிகள்! இந்த வெட்கக்கேட்டை எடுத்துக்கூறத் துணிவு காங்கிரஸ் M. L. A-க்கு ஏற்பட்டது கண்டு எனக்கு ஒரு வகையில் மகிழ்ச்சி.*

*பஞ்சமும் நோயும் நின்மெய்யடியார்க்கோ? என்று பாரதியார் பாடினார். ஆமாம், ஆமாம் என்று காங்கிரசாட்சி அறைகின்றது.*

*பஞ்சம் ஒருபுறம், பதைத்தோடி வந்து பிழைக்க வழி கேட்கும்* 'பராரிகள்' *மற்றோர் புறம், நோய் நொடி நெளிவது வேறோர்புறம், என்று இப்படி நிலைமை இருக்கும் போது, மகிழ்ச்சியா பொங்கும்? என்று கேட்கத் தோன்றும், தம்பி! மகிழ்ச்சி பொங்குமா? பொங்காது! ஆனால் வேறொன்று பொங்கி வழிகிறது!! என்ன என்கிறாயா? இதோ கேள், மற்றோர் காங்கிரஸ் எம். எல். ஏ. பேசுவதை.*

**"வீட்டுக்கு வீடு கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழில் விமரிசையாக நடந்து வருகிறது! சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளாவிடில் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குக் கெட்ட பெயர் வந்துவிடும்" என்று காங்கிரஸ் எம். எல். ஏ. மாரிமுத்து என்பவர் பேசுகிறார்.**

*சர்க்கார் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லையோ, என்றால், இது சம்பந்தமாக எடுக்கவில்லையே தவிர, வேறு 'அதிமுக்கியமான' ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறது; 'கோடையிலே இளைப்பாறிக்கொள்ளும்வகை கிடைத்த குளிர் தருவாய்' விளங்கும் உதக மண்டலத்தில், ஒரு மகாராஜாவின் அரண்மனையைப்பல இலட்சரூபாய் விலை கொடுத்து வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.!!*

*வெள்ளையாட்சிக் காலத்தில், கோடையின் போது, 'ஊட்டி' செல்வர், இங்கு மேடையில் 'கோடைஇடி' யெனக் காங்கிரசார் முழக்கமிடுவர், "கேளுங்கள் தேச மகா ஜனங்களே! இங்கு கொளுத்தும் வெய்யிலில், கால் கொப்பளிக்கும் நிலையில், கை புண்ணாகும் நிலையில், கண் பூத்துப் போகும் நிலையில், நாம் பாடுபடுகிறோம், மண்டை பிளந்து போகிறது இங்கு; நமது வரிப்பணத்தைக் கொள்ளையடிக்கும் கொலைகாரக் கும்பல், கோடை தாக்காதிருக்க, ஊட்டிக்குப் போயிருக்கிறார்கள், உல்லாசமாகக் காலங்கழிக்க!! இதுவா தர்ம ராஜ்யம்? இதுவா இராம ராஜயம்!!—என்று வெளுத்து வாங்கினார்கள்.*

*கோடை இடிகள் கோலோச்சுவோராகிவிட்டனர்; இப்போது ஊட்டியில் ஆரன்மூர் அரண்மனையை வாங்க ஏற்பாடாகி வருகிறது.*

**"ஊட்டியில் இந்த ஏற்பாடு நடைபெறுகிறது என்கிறீரே, ஊட்டியில் மது விலக்குச்சட்டம் தளர்த்தப்படுகிறதாமே, உண்மையா?" என்று தெய்வசிகாமணி எம். எல். ஏ.** *கேட்கிறார், அமைச்சர் கூறுகிறார், "இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை" என்று.*

*இப்படியாகத்தானே காங்கிரஸ் இராஜ்யபாரம், நடைபெற்றுக் கொண்டுவருகிறது; இந்தவிதமான ஆட்சியை "கேள்வி கேட்பாராற்ற" முறையிலே விட்டுவிடக் கூடாது, அடுத்த தேர்தலில் கடும் போட்டி இருக்கவேண்டும். ஜனநாயகத்துக்கு அப்போதுதான் சிறிதளவாவது வாய்ப்பு ஏற்படும் என்ற நோக்குடன், நமது கழகம் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டாலோ, "எமது கண்ணுக்குக் கண்ணாக உள்ளவர் காமராஜர்; அவருக்கா எதிர்ப்பு? அடபாவிகளா! நீங்கள் நாசமாய்ப்போக!! கருவேப்பிலைக் கொத்துப்போல அவர் கிடைத்திருக்கிறார்!! அவருக்கு 'உலை'வைக்கலாமா?" என்று கேட்கின்றனர்.*

*திராவிடநாடு பிரிவினையை ஒப்புக்கொள்பவன் நண்பன்; இல்லை என்பவன் எதிரி! இதுதான் இனி ஒரே பிரச்சினை—என்ற பேச்சு 'பழங்கதை' யாகிவிட்டது, இப்போது உள்ள ஒரே பிரச்சினை, உயிர்ப்பிரச்சினை, காமராஜர் மீண்டும் முதலமைச்சராகவேண்டும், அதை இந்தக்கண்ணாரக் காண வேண்டும் என்று கூறுகின்றனர்.*

*பஞ்சம் பட்டினி போக்காவிட்டாலும், சொந்த நாட்டான் பிச்சை எடுப்பதைக் கண்டு ஒரு சொட்டுக் கண்ணீர் விடாவிட்டாலும், சோற்றுக்கில்லாதானே! செத்துத் தொலை! என்று இலங்கையில் உள்ள சர்க்கார், தமிழனைச் சுட்டுத் தள்ளக் கண்டும் துளி பதறாவிட்டாலும், கள்ளச்சாராயம் பொங்குவதையும் கள்ளமார்க்கட் பெருகுவதையும் கண்டும் காணாதது போலிருந்துவிட்டாலும், மீண்டும் காமராஜர் ஆட்சிதான் வரவேண்டும் என்று காங்கிரஸ்கட்சி கருதக் கடமைப்பட்டிருக்கிறது.*

"காங்கிரஸ் கட்சியானது இந்துமதக் கோவில்களிலுள்ள மண்டபங்களைப்போலிருக்கிறது. உள்ளே புகுந்தால் ஒரே இருள். வௌவால் புழுக்கை துர்நாற்றம். அண்ணாந்து பார்த்தால் வௌவால்கள் தொங்கிக்கொண்டிருப்பதைத் தவிர வேறெந்தக் கலையையும் காணமுடிவதில்லை. கோயில் மண்டபம் என்ற பக்திக்காக அதன் துர்நாற்றத்தை வெளியில் கூற வெட்கப்படுகின்ற பக்தர்போல இன்றுஞ்சிலர் அந்தக் காலத்துக் காங்கிரஸ் ஆச்சே அதைக் குறை கூறலாமா? என்று கருதிக்கொண்டு மூக்கைப்பிடித்துக்கொண்டு அந்த இருட்டு மண்டபத்திற்குள் இன்னமும் நடமாடிக் கொண்டிருக்கின்றனர்.

திருட்டுக்கும் கொலைக்கும் தவிர ஆயிரக்கால் மண்டபம் வேறு ஏதேனும் நல்ல காரியத்துக்குப் பயன்படுகிறதா? காங்கிரஸ் கட்சியின் நிலையும் அதேதான். அந்த மண்டபத்துக்குள்ளிருந்து வருகிறவர்களைக் கண்டாலுமே யோக்கியர் சந்தேகப்படாமலிருக்கமாட்டார்கள்"

**இது, தம்பி, பெரியார் கருத்து; விடுதலை மூலம் நாட்டுக்கு அளிக்கப்பட்டது.**

காமராஜர், அந்த மண்டபத்தில் தான் கொலுவீற்றிருக்கிறார்!!

பத்தர்கள்தான், வெளவால் புழுக்கையின் துற்நாற்றத்தையும் சகித்துக் கொண்டு, அந்தநாள் மண்டபம் என்று பாராட்டுகிறார்கள்; நமக்குமா அதே நிலைமை?

பக்தர்களே கூட, நாற்றம் அதிகமாகிவிட்டால், பதை பதைக்கிறார்கள்—மண்டபத்தைச் சுத்தம் செய்தாக வேண்டும் என்று கூக்குரலிடுகிறார்கள்.

எல்லை குறைகிறதென்றால் "விடமாட்டேன்" என்று வங்கம் சீறுகிறது, பம்பாய் உங்களுக்கில்லை என்றால், மராட்டியர் "பார்க்கிறோம் ஒருகை" என்கிறார்கள், குஜராத் தனிமாகாணமாக அமையாது என்றால், மந்திரியின் வீடு புகுந்து தாக்குகிறார்கள் குஜராத்திகள்.

இங்கு தேவிகுளம் பீர்மேடு, நெய்யாற்றங்கரை கொச்சின் சித்தூர், செங்கோட்டையில் ஒருபகுதி, பறிபோயிற்று! வந்தேமாதரம்—என்று வாளா இருந்துவிடச் சொல்லிவிட்டார் காமராஜர்.

யாராவது வாய் திறந்தாலோ, அவர்கூட, நியாயந்தானே, உரிமை பறிபோனதால் மனம் குமுறுகிறார்கள் என்று கூறுவார் போலிருக்கிறது; மற்றவர்களல்லவா, "காமராஜர் மீது எதிர்ப்பு எழலாகாது" என்கிறார்கள்.

ஆந்திர தமிழக எல்லைத் தொல்லைக்கு இன்றுவரை பரிகாரம் காணோம். என்றாலும் கடை அடைப்புச் செய்து கண்டனத்தைக் காட்டினால், காலித்தனம் என்று கூறவும், மனம் இடம் தருகிறது!!

"காங்கிரசை இப்போது மட்டும், கடையனே! ஆதரிக்கவா செய்கிறோம். அது, ஐயா சொன்னது போல, வெளவால் புழுக்கை துர்நாற்றமடிக்கிற பாழ்மண்டபந்தான். எங்களுக்கு அந்த மண்டபத்தின் மீது வெறுப்புத்தான், எப்போதும் போல; ஆனால், காமராஜர் நல்லவர், இன உணர்ச்சி உள்ளவர், ஏதோ நாம் எண்ணுகிறபடி, சொல்லுகிறபடி, நல்ல காரியங்கள் செய்து வருகிறார். எனவே தான், மீண்டும் அவர் வரவேண்டும் என்று ஆதரிக்கிறோம்; இது புரியவில்லையா?" என்று கேட்டுக் கெக்கலி செய்யும் தோழர்கள் இருக்கிறார்கள். தம்பி! காமராஜர், தமது இன உணர்ச்சியை எந்தவகையில் காட்டிக்கொண்டு வருகிறார் என்று கூடக் கேட்க வேண்டாம்—பொது ஜன நன்மையை உத்தேசித்து அதற்குப் பதில் அளிக்கக்கூடாது என்று கருதிக் கொண்டிருக்கக் கூடும்—வாதத்துக்காக ஒப்புக் கொள்வோம், இன உணர்ச்சி கொண்டவர் என்பதை; ஆனால் காங்கிரஸ் தலைவரோ, முதலமைச்சரோ, இன உணர்ச்சி கொண்டவராக, அதன்படி நடந்து கொள்பவராக இருந்துவிட்டால், அந்தக் காரணத்துக்காக, காங்கிரசை எதிர்க்காதிருக்கலாமா? என்பது பற்றி எண்ணிப்பார்த்திட வேண்டுமல்லவா?

இதற்கும் எனக்குத் துணை 'பெரியாரின் பேரகராதி' தான்

> இன உணர்ச்சியில் ஓமந்தூர் ரெட்டியாரவர்கட்கு இணையான நீதிக்கட்சித் தலைவர் ஒருவர்கூட இல்லையென்று நாம் வெட்கமின்றி ஒப்புக் கொள்ளவும் தயாராயிருக்கிறோம்.
>
> பழைய ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களைவிட அதிகமான இன உணர்ச்சி கொண்ட காங்கிரஸ் தலைவர்கள் பலர் இருக்கின்றனர் என்பது பற்றி நாம் பெருமைப்படுகிறோம்.
>
> ஆயினும் காங்கிரஸ் ஒழிப்பு நாள் கொண்டாடுவதன் நோக்கம் என்ன?
>
> 1. காங்கிரஸ் இயக்கம் ஏழைகள்—பாட்டாளிகள் ஆகியோருக்குக் கேடுசெய்யும் இயக்கம்.
> 2. காங்கிரஸ் இயக்கந்தான் தென்னாட்டை வடநாட்டு முதலாளிகளுக்கு அடமானம் வைத்திருக்கிறது.
> 3. காங்கிரஸ் இயக்கந்தான் ஜாதிகளையும் மதங்களையும் கிளறிவிட்டுக் கொண்டிருக்கிறது.
> 4. காங்கிரஸ் இயக்கந்தான் தென்னாட்டுக் கலாச்சாரத்தை அழித்து வருகிறது.

இதைவிடத் தெளிவாக என்னால் கூறமுடியாது, தம்பி, இது தெளிவளிக்காவிட்டால், தெளிவு பெறக் கூடாது என்று தீர்மானித்துக்கொண்டு, திட்டமிட்டுக்காரியம் நடக்கிறது என்பதுதானே பொருள்.

தம்பி! ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்த நாட்களில், உனக்கு நினைவிருக்கும் என்று எண்ணுகிறேன், மறதி உள்ளவர்களுக்கு நினைவூட்டு, அவர், கதர்ச் சட்டைப் பெரியார், கருப்புச்சட்டை நண்பர், என்றெல்லாம் பெயரெடுத்தார்.

> அச்சம் தயை தாட்சண்யமற்ற நிர்வாகி
>
> பார்ப்பன மேலிடமிரட்டலுக்குப் பணியாத விவேகி
>
> வடநாட்டு மத்யசர்க்காரிடம் வாதிடத் துணிந்த அஞ்சா நெஞ்சர்

என்றெல்லாம், போற்றிப் புகழப் பட்டவர்.

தர்மமும், நேர்மையும் அதே போது நெஞ்சுஉரமும் அவர் ஆட்சியில் கொலுவிருந்தன என்று நாமே பேசியிருக்கிறோம்.

அவருடைய பழைமைஉணர்ச்சி, பக்தி, ஆகியவை கூட, பசப்பு அல்ல, சுயநல நோக்கமுடையதல்ல என்று பாராட்டினோம்.

அந்த நாட்களிலே, வடநாட்டுப் பத்திரிகைகள், சென்னையை ஆட்சிபுரிவது, பெரியார் கட்சி தான்—ஓமந்தூரார் அதற்கு ஒரு திரை—கருவி—என்று எழுதின.

அப்போது 'நாம்' ஒன்றாக இருந்த காலம்.

எனக்கு, "இந்தி எதிர்ப்பு நடத்தும் 'சர்வாதிகாரி'பட்டம்கிடைத்த நேரம்.

'சிட்ரன்' கார் சவாரியும், மீரான் சாயபுத்தெரு மாளிகையில் ஒரு அறையும், விருந்துபசாரமும், சினிமா செல்வதற்குக்கூடப் பணமும் பெரியார் மூலம் அன்புடன் தரப்பட்டு வந்த காலம்.

'பழம் பெருமையை எண்ணி ஏங்க அல்ல, இதைக் கூறுவது, அந்த நாட்களில், அப்படிப்பட்ட ஓமந்தூரார் என்று நாம்பாராட்டிய போதிலும், அவர் நல்லவர், ஆகையால் அவருக்காக, வெள்வால் புழுக்கை துர்நாற்றத்தைச் சகித்துக்கொள்ள வேண்டுமா என்று கேட்டோம் என்பதை எடுத்துரைக்கத்தான்.

இன் உணர்ச்சி இருக்கலாம்—இருக்கிறதுஓமந்தூராரிடம், என்ருலும், காங்கிரசில் அல்லவா இருக்கிருர்! — என்று நாட்டு மக்களைப் பார்த்துக்கேட்டோம்—இஃதல்லவா கொள்கை உரம் என்று நேர்மையாளர்கள் பாராட்டினர்.

அண்ணு! இதுசரி, ஆனல், ஓமந்தூரார், 'வைதீகப்பிடுங்கல்' நமது 'சுயமரியாதை'க் கிளர்ச்சிகளுக்கு வைரியாக இருந்தவர், காமராஜர் அப்படி அல்ல; நாம் இவருடைய ஆட்சியில், எத்தனை புரட்சிகரமான சுயமரியாதைக் கிளர்ச்சியும் செய்யலாம், இடம் தருகிருர்" என்று வாதாட எண்ணுவாய் தம்பி! இதுவும் சரியான வாதமல்ல—ஏனெனில்

காமராஜரும் இப்போது கோயில் கோயிலாகச் செல்கிருர்.

கோயில் கோயிலாகச் சென்றுகொண்டிருந்த ஓமந்தூரார், மடாதிபதிகளின் ஆதிக்கத்துக்கே உலைவைக்க அஞ்சா நெஞ்சுடன் அன்று கிளம்பினர்.

எத்தனை பெரிய சுயமரியாதைக் கிளர்ச்சிக்கும் இடம் தருபவர் இந்தக் காமராஜர் மட்டுமல்ல; ஆச்சாரியார் காலம், பிள்ளையார் உடைத்த நேரம்.

ஏனவே, இந்த சர்ட்டிபிகேட்' தந்து, காமராஜருக்கு ஆதரவு திரட்டுவதிலும் அர்த்தமில்லை.

மற்ருேர் உண்மையையும், அறிந்துவைத்துக்கொள் தம்பி, குமாரசாமி ராஜா முதலமைச்சராக இருந்த நாட்களில், (13—10—51) பத்திரிகை நிருபர்கள் அவரை அணுகி,

**"திராவிட கழகத்தார் கோயில்கள் முன்பு கூட்டம் போட்டுக் கடவுள்களை பரிகசிக்கிருர்களாமே இதைத் தடுக்க முடியாதா?"**

என்று கேட்டனர், அதற்கு குமாரசாமி ராஜா, என்ன சொன்ஞர்?

எந்தப் பத்திரிக்கைநிருபராவது காமராஜரிடம் இந்தக் கேள்விகேட்டால்.

"போங்க, போங்க, வேறே வேலையே கிடையாதா உங்களுக்கு? உங்க கோயிலும், உங்களோட சாமிகளும் மகா லட்சணந்தான்! திட்டிஞ என்ன தீயா பிடிச்சு விடும்"

என்று கேட்டு, கேள்வி கேட்டவர்களைத் திக்குமுக்காடச் செய்துவிடுவார், என்று பதில் கூறுவதற்குத் துடிப்பவர்கள் என் மனக்கண் முன் தெரிகிருக்கள்.

குமாரசாமிராஜா, இனஉணர்ச்சிததும்பும் உள்ளத்தினர், நம்மவர்—அவர் நமது ஆதரவினைப் பெற்றுத் தீரவேண்டியவர் — என்று நாம் கூறினது கூட இல்லை; எனினும், தம்பி, நிருபர்களிடம் அவர் என்ன பதிலளித்தார்?

**"திராவிட கழகத்தினர் கடவுள்களைத் திட்டுவதுபற்றி யாதொரு நடவடிக்கையும் சர்க்கார் எடுக்க முடியாது. கோயிலுக்குச் செல்லும் தனிப்பட்டோரை பரிகசித்தாலே நடவடிக்கை எடுக்கமுடியும்"**

இப்படித்தான் சொன்னுரே தவிர, "பக்தர்காள்! அஞ்சற்க! நாம் இந்தப்பாவிகளை அழித்தொழித்துவிடுகிருேம்" என்று கூறவில்லை.

இதற்கு முன்பு நமக்கு முதல் அமைச்சராக வாய்த்திருந்தவர்களெல்லாம், வைதீகப் படைத் தளபதிகளாக இருந்து, சுயமரியாதை இயக்க நடவடிக்கைகளை நொறுக்கித் தள்ளியது போலவும், காமராஜர் மட்டும்தான், வைதீகர்களுக்கு இடமளிக்காமல், சுயமரியாதைக் கிளர்ச்சிகளுக்குப் பாதுகாப்பாகத் தமது ஆட்சி அதிகாரத்தைத் துணைதருவதுபோலவும், வாதிடுவது அவரிடம் பிறந்துவிட்ட வாஞ்சனையைக் காட்டுகிறதே தவிர, வேருென்றுமில்லை.

குமாரசாமிராஜா, இன்னும் தெளிவாகவே கூறினர்,

"மதச் சார்பற்ற சர்க்காரில் மதத்தைக் கண்டித்துப் பேசுவதைத் தடுக்க முடியாது. கோவிலுக்கு முன் ஒரு கட்சிக்குக் கூட்டம்போட இடமளிக்கையில் மற்ருெரு கட்சிக்கு மட்டும், மறுக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் பொதுக் கூட்டம் போடக் காங்கிரஸ் கட்சிக்கு அனுமதி அளித்தபிறகு, அதே இடத்தில் கூட்டம்போடத்திராவிட கழகத்துக்கோ, இதர கட்சிக்கோ அனுமதி மறுக்க முடியாது"

இதைவிட, தம்பி, காமராஜர் போக்கிலே என்ன புதுமை, புரட்சி, நேசம், பாசம், காண்கிருேம்!!

குமாரசாமிராஜா, ஓமந்தூரார், ஆகியோர் நல்லவர்கள்—நேர்மையாக நடந்து கொண்டவர்கள் என்பது கண்டோம்—எனினும், அப்போது,

**"தென்னுட்டான் தன் நாட்டுக்குச் செய்யவேண்டிய முதல் தொண்டு காங்கிரசை ஒழிப்பதுதான்!"**

என்று அழுத்தந்திருத்தமாக விடுதலை, எழுதக் கண்டு, தம்பி, நீயும் நானும், தோள்தட்டிக் கொண்டு கிளம்பினேம், காங்கிரசை எதிர்க்க, கவனமிருக்கிறதல்லவா?!

ஏனெனில், நமக்கு 'விடுதலை' எடுத்துக் காட்டிற்று, அவருக்கு

இன உணர்ச்சி இருக்கலாம், இவர் நேர்மையாளராக இருக்கலாம், ஆனால், அதற்காக நாம் மயங்கி விட முடியாது, வெளவால் புழுக்கை துர்நாற்றத்தைச் சகித்துக்கொள்ள முடியாது என்று அறிவூட்டியது.

**காங்கிரஸ் கட்சி பிர்லாகட்சி, டாட்டாகட்சி, முத்தய்ய செட்டியார் கட்சி —வடபாதி மங்கலம் கட்சி.**

**காங்கிரஸ்கட்சி பிராமணப் பாதுகாப்புக்கட்சி —வடநாட்டுச் சுரண்டலை ஆதரிக்கிற கங்காணிக் கட்சி.**

**காங்கிரஸ்கட்சி அடக்குமுறை ஒன்றையே நம்பி வாழ்கின்ற பண நாயகக்கட்சி.**

என்று அன்று 'விடுதலை' எழுதிய நிலையில்தான் இன்றும் காங்கிரஸ் இருக்கிறது.


அந்தக் காங்கிரஸ் வெற்றி பெற்றுத்தான் காமராஜர் முதலமைச்சராகவேண்டும்.

அந்தக்காமராஜர் வெற்றி பெற்று முதலமைச்சராகவேண்டும் என்று, "வெளவால் புழுக்கையின் துர்நாற்றத்தை எப்படிச் சகித்துக் கொள்வது" என்று கேட்ட 'விடுதலை' இன்று வாதாடுகிறது

'பேரகராதி'யைப் பார்க்கிறேன் —திடுக்கிட்டுப் போகிறேன்.

தம்பி! என்னைப்பற்றி, இழித்து எழுதுவது கண்டு நீ, வருத்தப் பட்டு, எனக்கு ஆறுதல் கூறுகிருய். எனக்கு, நிச்சயமாக, என்னைப்பற்றி எழுதப்படுகின்ற, இழிமொழிபற்றி, எரிச்சல் கிளம்புவதில்லை. எனக்கு இருக்கிற ஒரே திகைப்பு, வெளவால் புழுக்கையின் துர்நாற்றம் சகிக்கமுடியவில்லை என்றல்லவா, பேரகராதி எழுதிற்று........இப்போது........ என்று எண்ணித்தான், திடுக்கிட்டுப்போகிறேன். உனக்குஎப்படி இருக்கிறதோ? ஊரார் என்ன எண்ணுகிருர்களோ!

அன்பன்,



புறநானூற்றில்....

# மன்னர்

**[1]**

மா. கி. தசரதன்

**ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம் இன்றே
வேந்து அமைவு இல்லாத நாடு**

மக்கள் கூட்டமாகக் கூடி காடு கொன்று நாடு அமைத்து வாழுகின்ற வாழ்க்கையில் அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, உறையுள் எல்லாம் குறைவறப் பெற்று வளங் கொழிக்கும் வாழ்வாக இருந்தாலும், ஆளுகின்ற அரசு அமையாத நாடு பயன் இன்றிப் பாழ்பட்டுப் போகும் என வள்ளுவர் குறிப்பிடுகின்ருர்.

வேண்டியசெல்வமும்விளைபொருள்களின் மிகுதியும் இருந்து விடுவது மட்டும் அமைதியான வாழ்க்கையை ஏற்படுத்தித் தராது. வான்பொழியும் காடுகளில் வற்ருத நதிகளின் உதவியால் விண்முட்டி ஓங்கி வளர்ந்திருக்கும் மரங்களிலும் அவைபற்றிப் படரும் கொடிகளிலும் காய்களும் கனிகளும் குறைவின்றிக் கிடைக்கின்றன என்ருலும், அந்தக் காய்களையும் கனிகளையுமே நம்பி வாழும் குரங்குகளின் கூட்டத்தில் அடிக்கடி குழப்பங்களும் பூசல்களும் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன.

பிற உயிர்களின் உடலையே நம்பி வாழும் சிங்கம், புலி போன்றவையும் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டு மடிந்து சாகின்றன.

வாழ்வின் தேவைக்கான எல்லாம் பெற்றிருந்தும அவை அமைதியின்றித் தவிப்பதற்குக் காரணம் அவற்றிடையே ஒரு கட்டுப்பாடான சமுதாய நெறி இல்லாமைதான்-

மனிதனும் மற்ற விலங்குகள் போல் தன்னினத்தவனையே வீழ்த்தி அழித்தொழிந்து போகாமல் இன்று பெருகி வாழ்ந்து வருவ'தின் காரணம் இவன் தன் ஒத்தவர்களைக் கூட்டித் தலைமை ஏற்படுத்தித் சமுதாய நெறிபடைத்து வாழ்ந்துவரும் முறையாகும். அத்தகைய அமைப்புக்கள்தான் அரசு, என்பது

அந்த அமைப்புக்களின் ஒரு சில குறைகளால், நாகரிகம் பெருகியுள்ள இந்நாட்களிலும் மனித மனம் முற்றிலும் உயர்ந்து பண்படாது ஆதியில் இருந்தது போன்று அடிக்கடி பூசல்களும் போர்களும் ஏற்படுகின்றன. அன்று கொன்று குவித்த மக்களின் தொகையை விட இன்று கருவிகளில் பெற்றிருக்கும் மாற்றங்கள் காரணமாக, மிகுதியான தொகையினர் போர்க்களங்களில்மடிகின்றனர். ஆயினும் அறிஞர்கள் போர் முறையை வெறுத்து அமைதியைக் காக்க அவ்வப்போது துணை நிற்கின்றனர். அவ்வாறு ஒருசில அறிஞர்களின் பெருமுயற்சியால்தான் உலகத்தில் போர் வெறியும் கொலை முயற்சியும் தணிந்து பொலிவு பிறக்கின்றது.

காலம் மாறமாறக் கருத்திலும் வளர்ச்சி ஏற்பட்டு இன்று மனித இனம் தனி மனிதனின் தலைமையில் நம்பிக்கை இழந்து பல தலைவர்களின் கூட்டு ஆட்சியில் நம்பிக்கை கொண்டிருக்கின்றது. இதனைத்தான் குடியாட்சி என்கிருேம்.

முடியாட்சியாயினும் குடியாட்சியாயினும் ஏதேனும் ஒருவகை ஆட்சி இல்லாத நாட்டில் மககள் அமைதியாக வாழ இயலாது. எத்துணை வளம் படைத்த நிலமாக இருப்பினும் மக்கள் உண்ண உணவின்றித் திண்டாட நேரும். தடி எடுத்தோர் எல்லோரும் தலைவர்களாகி மக்கள் அல்லல் உற நேரும். எனவேதான், என்ன அமைவு இருந்தாலும் வேந்து அமைவு நாட்டுக்குத் தேவை என வள்ளுவர் நாட்டிற்கு இலக்கணம் கூறும் அதிகாரத்தின் இறுதியில் வற்புறுத்தியுள்ளார்.

அத்தகைய 'வேந்து அமைவு' பண்டைத் தமிழகத்தில் இருந்தமையால் தான் உலகமெல்லாம் நாகரிகம் என்ருல் இன்னது என்று தெரிந்து கொள்ளாத நாட்களிலேயே தமிழர் உயர்ந்த செந்நெறி வாழ இயன்றது.

பிற நாடுகளில் ஆளும் அமைப்புப்

பெற்றுவிட்ட மன்னர் மரபினர் மனம் போனபோக்கெல்லாம் ஆடித்திரிந்து மக்களை அலைக்கழித்திருக்கத் தமிழ் மண்ணை ஆண்ட மன்னர், மக்கள் நலனையே கருத்தாகக்கொண்டிருந் தனர்.

நாட்டு மக்களுடைய வாழ்க்கைக்கு உணவும் நீரும்தான் மிகமிக முக்கிய மானவை என்றாலும், அந்தக் காலத் தில் இவை இரண்டையும்விட மன் னன் மக்களுக்கு மிகமிகத் தேவைப் பட்டவன் என உணர்ந்திருந்தனர்.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

—புறம் 186.

என்று மன்னன் உணரவும், அவன் உணராத வேளைகளில் பிறர் உணர்த்தவுமாகத் தமிழ் மன்னர் விழித்த கண்ணினராக இருந்து, கோலோச்சி வந்தனர்.

வழிமுறை வழிமுறையாக வரு கின்ற பதவிதான் என்றாலும், மன்னர் மக்களுக்கு அஞ்சி நடந்து வந்தனர். குடிமக்கள் பழிதூற்றும் கோலோன் ஆகிவிடக்கூடாது என்பது அவர்கள் கவலை. புலவர் பெருமக்கள் பாராட் டிப் பாடிடும் நல்லாட்சியாய்த் தம் மாட்சி அமைய வேண்டும் என விரும் பினர்.

மன்னன் கையில் ஏந்தி இருக்கும் கோல் அதிகாரத்தின் சின்னமாக இருப்பது. ஆளுகின்ற ஆட்சியையே கோல் எனக் குறித்தனர். ஆட்சியில் நேர்மையும் முறையும் குலவி இருந்து மக்கள் நன்மை பெற்றால், அந்தக் கோலைச் 'செங்கோல்' என அழைத் துச் சிறப்பித்தனர். ஆனால் முறை கெட்டு நேர்மை குறைந்து மக்கள் துன்பப்பட நேர்ந்தபோது அதே கோலைக் 'கொடுங்கோல்' எனப் பழித் துப் பேசி வெறுத்தனர்.

அந்த வெறுப்புக்கு ஆளாகிவிடக் கூடாது என்று தமிழ் மன்னர் அஞ்சி ஒழுகினர். 'நம்மிடம் படை இருக் கின்றது; பட்டாளத்து வீரர் இருக் கின்றனர்; அதிகாரம் இருக்கிறது; குறைகூறுவோரைக் கொடுமைப் படுத்துவோம்' என அவர்கள் எண்ணிலர். மக்களிடம் ஆற்றல் மிக்க படை இன்றேனும் அவர் களுடைய கண்ணீர் இருக்கின்றது என்று அஞ்சினர்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்ற பேருண்மையை உணர்ந்து நடந்தனர்.மக்கள் தங்களை வாழ்த்த வேண்டும்; வசைபாடக்கூடாது என விரும்பினர்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்ற மன்னன் பகைவர் படை வந்தது என்ற சேதி கேட்டதும் சினங்கொள் வேங்கையாகின்றான். வந்துவிட்ட பகைவரை தொலைத்து விட எண்ணுகிறான். புடைத்து வீங் கும் தன்னிரு புயங்களையும், பொலிவு காட்டும் வாளையும் நோக்குகின்றான். வாயில் சூளுரை வெளிப்படுகின்றது.

"பகைவரைப் புறங்காணேன் ஆயின் நான்
மெலிகோல் செய்தேன் ஆகுக,"

—புறம். 71.

என்று சொல்லுகின்றான்.

இதே பாண்டி மரபில் வந்த பாண்டி யன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனும் இது போன்றதொரு சூழ் நிலையில் உரைக் கும் வீரவுரை,

"............
என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணது
கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!"

—புறம். 72.

என்பது ஆகும்.

கொடியன் எமை ஆளும்இறைவன் என்று மக்கள் வாய் பேசி, பேச ஆற் றல் அற்றபோது கண்ணீரைப் பரப் பிக் குடி மக்கள் தூற்றும் கோலை உடையவன் ஆவது எத்துணை கொடுமை என அன்றைய மன்னன் உணர்ந்திருக்கின்றான்.

மக்களுக்கு 'ஏன்?' என்று கேட்கும் உரிமை இல்லாத காலத்திலே, மன் னன் மனம் நினைத்தது நடக்கும்; சொன்னது சட்டம் என்று இருந்த நாட்களிலேயே, தமிழகத்தின்காவலர் கள் மக்கள் மன்றத்தில் நற்பெயர் பெறுவதனை உயர்வென்று எண்ணி னர்.

அத்தகைய உயர்ந்த வாழ்க்கை தான் பிறவிப் பயன் என்று சான் றோர் அவர்களுக்கு அடிக்கடி உணர்த்தி வந்தனர். பிறர் புகழ வாழாத வாழ்க்கையை மதிக்காது ஒதுக்கி விடுவர் மக்கள் என்பதனைக் கூறினர்.

உறையூர்முதுக்கண்ணன்சாத்தனார் என்றபுலவர் சோழன் நலங்கிள்ளிக்கு இவ்வுண்மையைஎடுத்துக்கூறும்போது அழகான உவமை ஒன்றனையும் காட்டுகின்றார்.

குளத்து நீரில் வளரும் தாமரை இலைகளைப் போல் யாராலும் பாராட்டப் பெறாது, மதிக்கப் பெறாது அழியும் மக்கள் தொகைதான் மிகுதி. ஆனால் கண்டாரெல்லாம் களிக்கவும் கவிபாடவுமாகச் சிறந்து விளங்கும் தாமரை மலரைப்போல் புகழ்மிக்க வாழ்க்கை வாழ்கின்றவர்கள் சிலரே என்றாலும் அந்த வாழ்க் கையே போற்றற் குரியது என்று அப்புலவர் குறிப்பிடுகிறார்.

அந்த உண்மையை உணர்ந்து போற்றியமையால்தான் பிறர் புகழு கின்ற 'உரையும் பாட்டும் உடைய' வாழ்க்கையை அன்றைய தமிழ் ஆட்சி யாளர்கள் விரும்பினர். புலவர் தங் கள் நிலங்களைப் பாடாது ஒதுக்கி விடுவதனை இழுக்கு எனக் கருதினர்.

நாடாளும் வகையில் சிறந்த பண்பு களைப் பெற்றிருந்தது போன்றே, தனிப்பட்ட தங்கள் சொந்த வாழ்க்கை யிலும் உயர்ந்த செந் நெறியைக் கைக்கொண்டு ஒழுகினர். பிற நாடு களில் எல்லாம் மன்னன் என்ற நிலை வாய்த்ததும் ஒழுக்க விதிகளை மறந்து தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டவர்களைக் காணுகின்றோம். கணக்கில்லாத்'திருமணங்கள்'செய்து கொண்டவர்கள் எத்துணையோ பேர்.

மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ் வழி என்று அன்று நம்பியதால் சமு தாயத்தில்உயர்ந்தஇடத்தில் இருந்த மன்னன் தவறான பாதையில் சென்றதும் மக்களும் அவனையே பின் பற்றுவர். எனவே ஒரு நாட்டில் மன்னன் நன்னிலை நின்று மக்களை யும் அந் நிலை நிறுத்தல் வேண்டும்.

தமிழ் நாட்டு மன்னர் மரபினர் அத்துறையிலும் நல்ல வழிகாட்டி களாக இருந்திருக்கின்றனர்.

சோழன் நலங்கிள்ளி என்பான் பகைவர் மீது படைகொண்டு செல் லுங்கால், "பகைவரை வென்று புறங் காணேன் ஆயின் என் மாலை பொது மகளிர் முயக்கில் குழைக" என வஞ் சினம் கூறியிருப்பதினின்றும் ஒழுக் கத்தை எத்துணை உயர்வாக அவன் மதித்து நடந்திருக்கிறான் என்பது தெளிவாகின்றதன்றோ?

'பொது மகளிர் அணைப்பில் என் மாலை கசங்கி அழிக' என்று சொல்லு தல் எளிதன்று. உடல் இன்பமே வேட்டு நிற்கும் நிலையிலும் அத்தச் சொற்கள் அரசவையில் வெளிப்படா. மன்னன் ஒழுக்கம் தவறினால் புலவர் கள் — சான்றோர் — அவனைப் புறக் கணிப்பர், மக்கள் அவனை வெறுத்து விடுவர். இந்த நிலைகள் மன்ன னுக்கு மகிழ்ச்சி தருவன அல்ல என் பதை எண்ணிப்பார்த்து நலங்கிள்ளி யின் சூளுரையைப் படிக்கும் போது தான் அவனுடைய ஒழுக்கத்தின்

உயர்வு புலப்படுகின்றது. நாட்டுப் பற்றுக் காரணமாகத் தன்னலத்தை—தன் நற்பெயரையும்—துறக்கும் அளவிற்கு அவன் மனம் பண்பட்டிருந்தது.

ஆட்சியாளருக்குத் தேவைப்படும் இவ்வுயரிய பண்புகளை அவர்கள் பெற்றிருந்தது சிறந்த கல்வியை அடைந்திருந்தமையால்தான் எனலாம். கல்லார்க்குப் பண்பிராது என்று கொள்ளுதல் கூடாது. கல்லாதார் மனம் பட்டை இடப்பெருத வைரம் போன்றது. அதில் உண்மை இருக்கும். ஆனல் துலங்கும் நிலையின்றி மங்கி மறைந்து கிடக்கும். கல்வி எனும் சாணைக் கல்லில் வைத்து பட்டை இடப்பெற்றதும் அதே வைரக் கல் முன்னிலும் பன்மடங்கு நன் முறையில் ஒளி வீசிடக் காணுகின்ருேம். அதே போல் கற்கக் கற்க மனத்தின் கண் மாசு ஒழிந்து மாண்புள்ள நிலைவாய்க்கும். அதற்குக் கற்கும் கல்வி தெளிவு தருவதாக இருத்தல் வேண்டும். கற்றும் தெளியாத கல்வியினும் கல்லாமையே மேல் எனலாம்.

இயற்கையாக நல்லறிவும், சூழ்நிலையால்பண்பாடும் கல்வியால் ஒழுககமும் சேர்ந்து விளங்கிய சான்ருேராகத் தமிழக வேந்தர் இருந்தனர்.

கற்றுத் தேர்ந்து கவி பாடும் அளவிற்குப் புலமை பெற்ற காவலர்கள் பலரைக் காணுகின்ருேம் புறநானூற்றில்,

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பான் கல்வியின் மேன்மையையும் கற்கும் முறையையும் விளக்கி ஒரு பாடல் யாத்துள்ளான். புறநானூற்றில் 183ஆம் பாடலாக இடம் பெற்றுள்ள அதனில்,

"எவ்வாருயினும் கற்றல் நன்று; ஏன்
எனின் ஒருகுடிப் பிறந்தோருள்ளும்
மூத்தவனை வருக என்னுது, அரசன்
இளையோன் கற்ருேன் ஆயின்
வழியே நிற்கும்" [அவன்

எனும் பொருள் அமையக் கூறியுள்ளான். கல்விக்கு எந்த அரசு மிகுதியான பொருள் செலவிடுகின்றதோ அதனையே நாகரிகமான அரசு என்று இன்று சொல்லுகின்ருேம். தமிழ் வேந்தன் அன்றே இவ்வுண்மையை உணர்ந்து கல்வியின் சிறப்பிது எனக் கூறியுள்ளான்.

பண்டைய மன்னர்களிடம் இருந்த எல்லாப் பண்புகளிலும் சிறநததாக ஒரு பண்பு நிலவிவந்தது. அவர்கள் தவருன வழிகளில் செல்லாதவாறு தடுத்துச் செல்லும்வழியை உணர்த்தி நல் ஆறு உய்த்து உதவிவந்தது ஒப்பற்ற அந்தப் பண்பேயாகும்.

அதுவே கற்ருேரை — புலவரை— மதித்து அவர் கூறிய வழி நிற்றல் என்பது.

வேறுவேறு நாடுகளில், புலவர்கள் வெறும் புகழ்க்காவியம் பாடிட வேண்டியவர்கள்; சோற்றுக்கில்லாதவர்கள், அவர்கள் சொற்குநாம் ஏன் செவிசாய்க்க வேண்டும் என வேந்தர் எண்ணிக் கிடக்கையில், இந்தத் தமிழ் நாட்டில் மட்டுமே, புலவனுடைய சொற்களுக்கு நன்மதிப்பும் அவன் அறிவுரைக்கு அடிபணிதலும் இருந்து'மன்னனின் கற்ருேன் மாண்புடையோன்' என்ற நிலை வாய்த்தது,

யாவருமே நெருங்கக் கூடாத முரசுக்கட்டிலில், காடும்மேடும்திரிந்து வந்த களைப்பால் புலவர் அறியாமல் படுத்து உறங்கிவிட்டபோது நீராட்டப் பெற்ற முரசத்துடன் வந்த மன்னன் வாளொடு ஓங்கிய கையைப், புலவர் மேனிகண்டு தாழ்த்திக் கவரி கொண்டு வீசச் செய்கின்ற அளவிற்குச் சான்ருேர் தமிழகத்தின் அரசனுல் சிறப்பும் உயர்வும் பெற்றிருந்தனர்.

தன் நிலப்பகுதியைப் புலவர் பாடாது ஒதுக்கி விடுதல் பேரிழப்பும் அவமானமும் ஆகும் என்று பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கருதிச் சூள் உரையில் அதனைக் குறிப்பிட்டிருக்கின்ருன்.

நாடாண்ட மன்னர் மட்டுமேயன்றி, மன்னர் மரபில் தோன்றியவருள்ளும் பலர் பண்புடையவர்களாக வாழ்ந்திருக்கின்றனர். பாண்டியன் மரபில் வந்தோரில் இளம்பெருவழுதி என்பார் ஒருவர். இவர் பெயருக்கு 'கடலுள் மாய்ந்த' என்ற அடைமொழி சேர்த்திருக்கின்றமையால் இவர் கடலில் மூழ்கி இறந்தவர் என அறியக் கிடக்கின்றது.

புறநானூற்றில் 182-ஆம் பாடலாக இடம்பெற்றுள்ள அவர் பாடலில் மிக மிக உயர்ந்த உண்மைகள் காணப்படுகின்றன.

"உலகம் நிலை நிற்கின்றது-யாரால் தெரியுமா? கிடைத்தற்கரிய அரும் உணவு கிடைப்பினும் அதனைத்தாமே உண்டு களிக்கவேண்டும் என்ற தன் நலநோக்கமின்றிப் பலர்க்கும் வழங்கி உண்டு, உலகம் கூறும் பழிக்கு அஞ்சி, புகழ் எனின் உயிரும் தந்து. பழி வரும் என்ருல் உலகமே அவர்களுக்கு ஊதியமாகக் கிடைப்பினும் அதனை ஏற்காது, மாண்புடையராக இருத்தல் மட்டுமன்றித் தமக்கென ஒருவிதமான முயற்சியும் செய்யாது பிறர்க்கென்றே வாழும் பெரியவர்களால்தான் உலகம், நிலைகிற்கின்றது."

என்னும் பொருள் பொதிந்த அப்பாடலில் பண்பையும் பொதுநலத்தையும் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி எத்துணை மதித்திருக்கின்ருர் என்று அறிகிருேம்.

ஒரு மனிதன் வாழும் சூழ்நிலைக்கேற்றவாறு உருவாக்கப்படுகின்ருன் என்பது உல்கியல் அன்ருே? சூழ்நிலை நன்முறையில் வாய்த்து வாழ்க்கை சிறப்பதற்குக் காரணமாக மன்னர் மரபில் வந்தவர்களும் நற்பண்பும் உயர்ந்த கொள்கைகளும் உடையவர்களாக இருந்தது தமிழக வேந்தருக்கு ஒரு நல்வாய்ப்பு ஆகும்.

இன்னும், ஈகை, வீரம் போன்ற பல நற்பண்புகள் அவர்களிடம் குடிகொண்டிருந்தன; அதனுல் குணத்தின் குன்றுகளாக விளங்கினர் அன்றைய ஆட்சித் தலைவர்கள்.

இந்த அளவிற்குச் செம்மனம் படைத்துச் சிறந்து வாழ்ந்ததினுல்தான் அவர்கள் முடிபுனைந்த வேந்தர்களாக இருந்தும், குடிபழி தூற்ருத கோலர்களாக இருந்து இன்றைய குடியாட்சித் தலைவர்களினும் பல வகைளில் மக்கள் மன்றங்களில் நற்பெயரும் நல்வாழ்த்தும் பெற்றிருந்தனர். அன்று நடைபெற்றது கோன் ஆட்சியாயினும் குடியாட்சியின் தன்மைகள் காணப்பட்டன. அந்த நன்மனம் இன்றைய ஆட்சிக்கு—தமிழ் நாட்டின் நல்லாட்சிக்கு மிகமிகத் தேவை அன்ருே?

★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முனனதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி

முகப்பில்...

# யுகந்தா

**"என்** அண்ணனையா, அரச பீடத்திலிருந்து அகற்றினர்—ஐயோ... எப்படிச் சகிப்பது இந்த அவமானத்தை..." என்று எண்ணினள் — நெஞ்சம் துடித்தது— இறந்துபட்டாள்.

"அரச குமாரி இறந்துபட்டாள், எமது அரசனே நாடு கடத்தப்பட்டான்—இனி எமக்கு மகிழ்ச்சி ஏது, மானம் பறிபோன பிறகு வாழ்வு தான் எதற்கு?" என்று மனமுடைந்து கூறினர் மக்கள்.

வயோதிகர்கள் கண்ணீர் வடித்தனர்; வாலிபர்கள் படபடத்தனர்; நாடெங்கும் சோகம் கப்பிக் கொண்டது.

கடைவீதிகள் அடைபட்டுக் கிடந்தன.

மாதா கோயில்கள் வெறிச்சிட்டுப்போயின!

யுகந்தா எங்கும், துக்ககோலமாகி விட்டது. அன்றுடம் பலகாத தூரம் கேட்கும் முரசு ஒலிக்கவில்லை. எமது கபாகா நாடுகடத்தப்பட்ட பிறகு, எமக்குக் களிப்பு ஏது? என்று கேட்டனர், யுகந்தா மக்கள்.

கபாகாவைத்தான் முகப்பில் காணகிறீர்கள்,

ஆங்கில உடையில் எழுச்சியூட்டும் தோற்றத்துடன் காணப்படும், கபாகா யுகந்தா நாட்டு மன்னன்.

கபாகா என்பது மன்னன் என்பதைக் குறிக்கும் பட்டப் பெயர்.

யுகந்தாவின் கபாகா, தமது ஆதிக்கத்தை மீறுவான் என்பதற்கான அறிகுறி கண்ட, ஆங்கில ஏகாதிபத்தியம், தமக்கு அடங்கி நடக்காதானை அரசப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு, வேறோர் 'பொம்மை'யை அரசாளவைத்திடலாம் என்று மனப்பால் குடித்தது.

கபாகாவை நாடு கடத்திற்று; இலண்டன் நகர் கொண்டு செல்லப்பட்டார்.

அரசனுக்கே இந்தக்கதி என்றால் நாம் எம்மாத்திரம் என்றெண்ணி மக்கள் அடங்கிக்கிடப்பர் என்று ஆங்கில வல்லரசு எண்ணிக் கொண்டது, ஆனால் யுகந்தாவில் இருந்தபோது பெறற செல்வாக்கைவிட, இலண்டன் சென்ற பிறகு கபாகாவால் அதிகச் செல்வாக்கு பெறமுடிந்தது.

தேசிய விடுதலை உணர்ச்சியின் ஈட்டி முனையானான், கபாகா.

கலகமும் கொந்தளிப்பும் ஏற்பட்டது, வழக்கமான அடக்குமுறை கொக்கரித்தது; யுகந்தா பணிந்திட மறுத்தது.

புகந்தா, யுகந்தா நாட்டின் ஒரு பகுதி—மாநிலம்.

யுகந்தா, ஆப்பிரிக்க கண்டத்தின் 'மைய' நாடு.

காடும் மலையும், காட்டாறுகளும் கடல் போன்ற ஏரிகளும் கொண்ட யுகந்தா, 94 000 சதுர மைல் பரப்புள்ளது; ஏறக்குறைய மேற்கு ஜெர்மனி அளவுள்ளது; 5,340,000 மக்கள் கொண்டது. இது முழுக்க முழுக்க ஆப்பிரிக்க மக்கள் கொண்ட நாடு; பிழைப்புத் தேடிச் சென்று சிறு வாணிபம் நடாத்தச் சில ஆயிரம் பேர் 'இந்தியா'விலிருந்து சென்று அங்கு தங்கியுள்ளனர், அதனினும் குறைந்த எண்ணிக்கையில் ஆங்கிலர் உள்ளனர்.

ஆட்சி அலுவலைப் பார்ப்பதிலும், தொழில் நிலயங்களை ஆட்சி செய்வதிலும், வெள்ளையர் ஈடுபட்டுள்ளனர்.

வெள்ளைப் பாதிரிகள் இங்கு ஏராளம்.

யுகந்தா மக்களில் மிகப்பெரும் பாலோர் கிருஸ்தவர்களாகி விட்டவர்கள்; எனவே மாதா கோயில்கள் பல கட்டப்பட்டுள்ளன.

கபாகா நாடு கடத்தப்பட்ட பிறகு, வெள்ளைப் பாதிரிகளின் மீதும், ஆப்பிரிக்க மக்களுக்கு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது.

பிரிட்டிஷ் பாதுகாப்பில் உள்ள நாடு—என்று யுகந்தா அழைக்கப்படுகிறது.

பட்டாளத்தைக்கொண்டு மிரட்டியோ போலீசைக்கொண்டு அமுல் செய்தோ, நாங்கள் யுகந்தாவை அடக்கி வைத்ததில்லை.

யுகந்தா முழுவதிலும், 400 வெள்ளைப் போலீஸ்காரர் மட்டுமே உள்ளனர், என்று பிரிட்டன் பெருமையாகப் பேசிக் கொள்கிறது.

ஆப்பிரிக்க மக்களுடைய நலனைக் குறிக்கோளாக வைத்தே ஆட்சி நடத்துகிறோம் என்றும் பேசுகிறது.

வழக்கமான ஏகாதிபத்தியப் புன்னகை இது என்பதை, மெள்ள மெள்ள உணர்ந்திருந்த மக்கள், கபாகா நாடு கடத்தப்பட்ட பிறகு வெளிப்படையாகவே இது குறித்துப் பேசலாயினர்.

யுகந்தாவில் சட்டசபை உண்டு, ஆனால் 'தேர்தல்' முறை ஏற்படவில்லை; சட்ட சபைகளில், ஆப்பிரிக்கரின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டு வருகிறோம், சுயாட்சிக்கு அந்த மக்களைப் பக்குவப்படுத்துகிறோம் என்று பிரிட்டன் பேசுகிறது.

யுகந்தா பருத்தி, உலகப் புகழ்பெற்றது.

காப்பிப் பயிரும் செழுமையாக இருக்கிறது.

யுகந்த்தா பருத்தியும் காப்பியும் பெற்றுத்தரும் செல்வம், பிரிட்டிஷ் மக்களின் வேட்டைக்குத்தான் பெரிதும் பயன்பட்டு வருகிறது. பருத்தியிலும் காப்பியிலும் கிடைக்கும் ஆதாயத்தில் மிகச்சிறிய அளவே யுகந்தா மக்களுக்குச் சேருகிறது இதுபற்றி எழும்பிய குமுறலை அடக்க பிரிட்டன, மக்களிடம் பல சீர்திருத்தங்களைக் காட்டி மயக்க முற்பட்டிருக்கிறது.

நைல்நதியின் உற்பத்தி இடத்தருகே, பெரியதோர் அணைகட்டி, புதிய பாசன வசதிக்கும், மின்சார உற்பத்திக்கும் ஏற்பாடு செய்துள்ளனர்.

இதற்கு ஓவன் வீழ்ச்சி அணை என்று பெயர்.

இங்கு கிடைக்க இருக்கும் மின்சாரம் யுகந்தாவில் புதிய தொழில்

களை நிறுவப் பயன்படும்—அதன் பயனுக, பருத்தி, காப்பியை மட்டும் நம்பிக்கிடக்கும் நிலை மாறி, செல்வம் பெருகப் புதிய வாய்ப்புகள் கிடைக்குமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மின்சாரம், மிக ஏராளமான அளவுக்கு இங்கு கிடைக்க இருப்பதால், யுகந்தாவிலிருந்து, கெனியா தாங்கனிகா, நயாஸ்லந்து ஆகிய இடங்களுக்கெல்லாம் மின்சாரம் விற்க முடியுமாம்; புதிய வருவாயாக இது அமையும் என்கிருர்கள்.

வளம், தொழில் எது பெருகினுலும், இவைகளால் பெரிதும் பயன்படும் வாய்ப்புப் பெற்றுள்ள தொழிலகங்களில் வெள்ளையரின் பிடி தான் இருக்கிறது.

உழவுத் தொழிலும், சிறு வாணிபமும்தான் இப்போது யுகந்தா மக்களுக்குப் பிழைப்பளித்து வருகிறது. இந்த நிலை, அமைதியை அதிக நாளைக்குத் தரக்கூடியதல்ல.

ஆப்பிரிக்கா எங்கும் மலர்ந்துள்ள உரிமை உணர்ச்சி யுகந்தாவிலும் புதிய எண்ணத்தை ஊட்டாமலிருக்க முடியுமா?

யுகந்தாவின், தலைநகர்கள் இரண்டு உள்ளன.

ஒன்று ஆட்சிப்பீடத்துக்கும், பிறிதொன்று வாணிபத் தலைநகராகவும் அமைந்திருக்கிறது.

யென்டெபி என்பது ஆட்சிபீடம் அமைந்துள்ள தலைநகரம்; விக்டோரியா ஏரி வட்டாரத்தில் இந்த எழிலூர் அமைந்துள்ளது. அரசாங்க அலுவலகங்கள் இங்கு உள்ளன.

வணிகக் கோட்டமாக விளங்குவது கம்பாலா

இதனை எழிலூராக்க ஏழுகுன்றுகள் உள்ளன.

இங்குள்ள பல்கலைக் கழகத்தில், கெனியா, தாங்கனிகா, நயாஸ்லாந்து நாடுகளிலிருந்தும் ஆப்பிரிக்க மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

விக்டோரியா ஏரி, மிகப் பெரியது; அயர்லந்து அளவுக்கு இருக்கிறதாம்,

முதலைகளும் நீர் யானைகளும் புரண்டுகிடக்கும் இந்த ஏரி, பயங்கரமும் கவர்ச்சியும் ஒருசேரக் கொண்டதாகக் காட்சி தருவது என்கின்றனர்.

யுகந்தாவில் மற்ருேர் இயற்கை வனப்பு, நிலாமலைத்தொடர்.

ஓங்கிவளர்ந்து நிற்கும் இந்தமலைகளின் உச்சி செல்வது மிகக் கடினம் — வெண்மேகத் திரள் கவிந்து கொண்டிருப்பதால், இதற்கென ஓர் வண்ணம் அமைந்து, நிலா மலை என்ற புகழ்ப் பெயர் ஏற்பட்டிருக்கிறது.

மற்ருேர் இயற்கை அமைப்பு, 12, 15, அடி உயரமுள்ள எறும்புப் புற்றுகள்.

உழைப்பால் மெருகேறின உடல் அமைப்புடன், யுகந்தா ஆடவரும் ஆரணங்குகளும் விளங்குகின்றனர்.

உடற்கட்டுக் கண்டு வெள்ளையர் வியப்பது போலவே, உள்ளத்தில் கிளம்பியுள்ள குமுறலைக் குறித்தும் அச்சம் கொண்டுள்ளனர் என்று கூறவேண்டும்.

இயற்கை அளிக்கும் செல்வத்தை, உழைப்பால் உருவாக்கி வாழ்ந்து வரும், யுகந்தா மக்கள், பாடுபடத் தயங்கவில்லை, பல்வேறு கனி வகையும் காய்கறி வகையும் கிடைக்கிறது, ஆனுல் பருத்தியும் காப்பியும் பரங்கியருக்காகத்தானு, என்று கவலை குடையும் மனதினராகத்தான் யுகந்தா மக்கள் இருக்க முடியும்.

கபாகா, கட்டுக்கு அடங்காத காளை, எனவே அரசனுக இருக்க விடப் போவதில்லை என்று கூறி, நாடு கடத்திவிட்டு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், வேருேர் அரசனைத் தேர்ந்தெடுக்கும்படி வற்புறுத்திய போது மக்கள் மறுத்து விட்டனர்.

மக்கள்சபையாகஉள்ள லூக்கியோவும் மறுத்து விட்டது.

கிராமத்துப் பெரியவர்களும் இணங்கவில்லை.

பொறி பெருந் தீயாக மாறிவிடும் என்பதைக் கண்டுகொண்ட பிரிட்டிஷார் ராஜதந்திர ஏற்பாடுகளைக் கொண்டு, சமரசம் பேசி, கபாகா நாடு திரும்பவும், அரசாளவும் வழி செய்தது.

புதிய வலிவுபெற்று கபாகா, நாடு திரும்பியபோது, நாடே விழாக் கொண்டாடிற்றும்.

ஒலிக்காதிருந்த முரசு ஒலித்து வரவேற்றது.

கபாகா, நாடு திரும்பா முன்னர், நாங்கள் 'சவரம்' செய்துகொள்ளவே மாட்டோம் என்றுகூறி, தாடி வளர்த்துக்கொண்டிருந்தனராம், 2500 மக்கள்!

கபாகாவை இந்த 2500 தாடிக்காரர்கள், நீர் துளிர்க்கும் கண்ணினராக நின்று வரவேற்றது உருக்கமானதோர் காட்சியாக இருந்ததாம்.

இத்துணை எழுச்சிக்கு வழிகோலிய கபாகா, இன்று நடந்துகொள்ளும் போக்குக் கண்டு, கசப்பும் கொதிப்பும் ஏற்பட்டிருக்கிறது.

காபாகா, நாடு திரும்பி வர வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டவர்களுக்கெல்லாம், 'தியாக பூமி' தரும் திட்டமொன்று, பிரிட்டிஷ் அனுமதியுடன் ஏற்பாடாயிற்று.

'தியாக பூமி'யாகத்தரப்படுவதற்காகப் பெரும் அளவு நிலம் தரப்பட்டது; ஆனுல் கபாகா, இதில் குறிப்பிடத்தக்க அளவு நிலத்தைத் தனதாக்கிக்கொண்டதுடன், தன் உற்ருர் உறவினர் நண்பர் குழாத்துக்கே, தியாக மான்யம் தருகிருராம்.

உண்மை ஊழியர்கள் உதாசீனம் செய்யப்படுகின்றனர், என்று மனக்கொதிப்பு ஏற்பட்டு, தியாக பூமித் திட்டத்தை அமுலாக்காதிருக்கும்படி, பிரிட்டிஷ் மேலதிகாரியைக் கேட்டுக் கொண்டுள்ளனர், மக்கள்.

கபாகா, நிலைமையை அறிந்து தன் போக்கைத் திருத்திக் கொண்டு, மீண்டும் மக்கள் இதயத்தில் இடம் பெறவேண்டும் என்று யுகந்தா மக்கள் விரும்புகின்றனர்.

யுகந்தாவின் செல்வம் இன்னும் எத்தனைகாலம், நமக்கோ? கிளர்ச்சி எப்போது எரிமலையாகிவிடுகிறதோ? என்ற கவலையுடன் பிரிட்டிஷார் உள்ளனர்.

யுகந்தா காடுகளிலே பயங்கரமும் கவர்ச்சியும் ஒருசேர இருப்பது போலவே, மக்கள் முகத்திலே ஓர் கவர்ச்சியும் மனத்துக்குள்ளே புரட்சியும் ஒருசேர இருந்து வருகிறது.

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

பார்ப்பனர்கள், 'வேத காலத்துக்கு' மீண்டும் சென்று தங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இலட்சணம் எப்படி இருக்கிறது என்பது விளங்க வேண்டுமானால், திருமலை திருப்பதியில் நடைபெற்றுக்கொண்டு வரும் பல்கலைக் கழகத்தில், சமஸ்கிருத வகுப்பு எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்று பார்த்தாலே போதும்.

**வியாகர்ண வகுப்பில் ஒரே ஒரு மாணவன்.**

**நியாய வகுப்பில் அதுவும் இல்லை!!—**

என்று அதிகாரிகளே அறிவித்துள்ளனர்.

ஏன்? தாத்தாச்சாரியார், வேதம் உலக நன்மைக்காகவே ஏற்பட்டது; அதன் ஒலியைக் கேட்டாலே இனிமை சுரக்கும்; அதன் பொருள் அறிந்தால் பேரறிவு பிறக்கும் என்று பேசுகிறார், 'வியாகரணமாவது, வெங்காயமாவது, பிழைக்கும் வழியைப் பாரடா பிச்சு!' என்று தாத்தாச்சாரியார் குலத்தவர், டாக்டர், என்ஜினியர், வக்கீல், கமிஷன் ஏஜண்டு, எனும் ஏதேனும் ஓர் வகையான, பசையான வேலை தேடிக் கொள்கிறார்கள் — வாழ்கிறார்கள்—ஓய்வாக இருக்கும்போது, தாத்தாச்சாரிகள் நடத்தும் மண்டப மாநாடுகளிலே கூடச் சென்று 'சிரவணம்' செய்கிறார்கள்.

நேரு கூடத்தான், நான் ஜவஹர்லால் நேரு மட்டுமல்ல, பண்டிட் நேரு கவனமிருக்கட்டும் என்று கூறுவது போல, அவ்வப்போது 'சமஸ்கிருத மொழி'யின் அருமை, மகிமை பற்றிப் பேசுகிறார்; அவருடைய பேரக் குழந்தைகளுக்கோ, ரைன் நதி தீரத்தையும், ஆல்ப்ஸ் மலைச் சாரலையும், பாரிஸ் பட்டினத்தையும் இலண்டன்மாநகரத்தையும் காட்டி மகிழ்வித்து வருகிறார்.

'மண்டப மாநாடு' தனிலே வேத மகிமை பற்றிப் பேசியவரே, பிறகு, ஒரு குரல் அழுதிருக்கிறார்.

> "வர வர, வேதம் கற்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. நிலைமை இதே ரீதியில் நீடிக்குமானால் வெகு சீக்கிரத்தில் நாட்டின் வருங்கால சந்ததியினரில் வேதம் கற்றவர்களைக் காண்பது அரிதாகிவிடும்."

வேதம், தாத்தாச்சாரியார் கூறியபடி, அவ்வளவு தேவையுள்ளது என்று தோன்றினால், ஆச்சாரியாரும் சி. பி. இராமஸ்வாமி ஐயரும், காலஞ் சென்ற மகாகனம் சாஸ்திரியாரும்,சிவசாமி ஐயரும், வேதபாடசாலைகள் அல்லவா நடத்திக்கொண்டிருந்திருப்பர்.

நாம் காண்பது அது அல்லவே.

தாத்தாச்சாரியார்கள், வேத மகிமைபற்றிப் பேசும் உபதேசம் வெளியிடப்படும் நாளிதழ்களிலேயே, மீன் வளர்க்கும் தொழில் பற்றி ஒரு கணபதி ஐயரும், செருப்புத் தொழிலின் இலாபம் குறித்து ஒரு சபேச ஐயரும், நெருப்புப்பெட்டித் தொழிற்சாலையின் நேர்த்தி பற்றி ஒரு நடேச சாஸ்திரிகளும், எழுதிடக் காண்கிறோம்.

"வரவரக் குறைகிறது" என்று வாட்டமடையும் தாத்தாச்சாரியார் உலக க்ஷேம நிமித்தம், இனி நீங்களெல்லாம் வேதம் ஓதுங்கள், மற்றக் காரியம் தீது, பாபம், என்று தம்குலத்தவருக்குஎடுத்துக்கூறித் தடுத்தாட்கொள்ள முயற்சித்துப் பார்க்கட்டும்!

இந்தப் பித்துக்குளிக்கு வேறு வேலை இல்லையா—என்று கேட்டு, அப்பளக் குழவி தூக்கிக்கொண்டு ஆக்ரோஷத்துடன் ஓடிவருவர், அம்மாமிகள்!

அவர்கள் காதிலே இன்று விழுகிற செய்தி கோமளத்தோட புருஷனுக்கு கனடாவிலேஉத்யோகம், அம்சாளோட 'ஆம்படையான்' அமெரிக்காவிலே கம்பெனி வைத்திருக்கிறார், ராஜூவோட மச்சினன் ரஷியாவிலே என்ஜினியர், என்ற இவைகளை! தாத்தாச்சாரியார் இவர்களிடம் சென்று, வேத ஒலியின் மகிமைபற்றிப் பேசினால், காதில் ஏறுமோ! ஏறுததால்தான் வரவர வேதம் படிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

> **"இவர்கள் செலவத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்தாலும், மற்றச் செல்வக் குடும்பங்களைப் போல் இன்ப வாழ்வில் ஈடுபடாமல், உழைப்பாளர்களாக, நல் வாழ்வு வாழ்கிறார்கள். ஆகவே இவர்கள் மேல்நாட்டிற்கு சென்று திரும்புவது நாட்டுக்கு நற்பயன் அளிக்கும்என்பதில் ஐயம் இல்லை'**

என்று வாழ்த்தி வழியனுப்புபசாரம் நடத்தினர், கருமுத்து தியாகராசனார், நாலுஇளைஞர்கள், அமெரிக்கா செல்லக் கிளம்பும்போது.

மதுரையில் இந்த மகிழ்ச்சிகரமான விழா நடைபெற்றது.

தொழில் துறையில் பயிற்சி பெற்றுவர, நான்கு இளைஞர்கள், அமெரிக்கா செல்லத் திட்டமிட்டனர். அவர்களை வாழ்த்தி வழியனுப்பு உபசார விருந்து நடத்தினர் அன்பர்கள்.

பெரிய சீமான்வீட்டுப் பிள்ளைகள், கேளிக்கையிலும் களியாட்டத்

## முருகா! முருகா!!

திருச்செந்தூர் சுப்ரமணியர் தேவஸ்தான வருவாயிலிருந்து, மீதமாகும் பணத்தைக்கொண்டு அங்கு ஒரு கல்லூரி கட்ட வேண்டுமென்ற யோசனைக்கு, நிதி அமைச்சர் சுப்ரமணியனார் ஒப்பம் அளித்துப் பேசுகிறார்.

இதிலென்ன தவறு? கோயில் பணத்தைக்கொண்டு, மக்களின் அறிவு வளர்ச்சிக்காகச் செலவிடுவது, நல்லதுதான், தவறில்லை.

இன்றுள்ள சட்டம் இதற்கு ஏற்றதாக இல்லையானால், சட்டத்தைத் திருத்தவேண்டியதுதான்.

உடனடியாக திருத்தவேண்டியதுதான்!

திருச்செந்தூரில் ஒரு பள்ளி விழாவில், நிதி அமைச்சர் இது போல் 'சுயமரியாதை'க் கோலம் காட்டினார்.

முருகா! முருகா! இப்படியா ஒவ்வொருவரும் உன்னைக் கைவிட்டுவிடவேண்டும்; ஆச்சாரியாருடைய ஆஸ்தீக வித்யாசாலையில் சட்டாம்பிள்ளை வேலை பார்த்துவரும் சுப்ரமணியமே அல்லவா, இப்போது, உன் மடியில் கைவைக்கிறார், என்று சட்டிச் சாமியும் மொட்டைச் சாமியும் சஞ்சலப்படுகின்றனர் போலும்!!

★

திலும் ஈடுபட்டுக் காலங்கழிக்கலாம், தங்கத்தட்டிலே வைரம் பதித்து, அதனை பொற்கொடி ஏந்திவர, அதிலே உள்ள கனி வகையினை பொறுக்கி எடுத்துச் சுவைத்துவிட்டு, கனியிருக்கக்காய் கவர்ந்தேன், கண்ணே! அருகேவா! மாதுளைகள், மாங்கனிகள், மதுரம், முல்லை மணம், எல்லாம ஒருசேரப் பெறுவதற்கான வகை இருக்க, நானோர் ஏமாளி, நறுக்கிவைக்கப்பட்ட மாம்பழத்தையும், பொறுக்கித் தரப்பட்ட திராட்சையையும், எடுத்துச் சுவைத்து ஏமாந்து கிடக்கிறேன்! உன் புன்னகையின் பொருள் இப்போதல்லவா தெரிகிறது!" என்று கொஞ்சுமொழி பேசிக் கோல மயிற்சாயலாளுடன், கூடிக் குலவி மகிழ்ந்திருக்கலாம்—செல்வம் இத்தகைய சுகானுபவம் தரும் வாய்ப்பளிக்கிறது; எனினும் அவர்கள் சுகத்தில் மூழ்கி ஆழ்ந்திடாமல், அமெரிக்கா செல்கிருர்கள். தொழில் நுணுக்கம் பயின்று வர. அது கணடே, கருமுத்து கனிவுடன் அவர்களை வாழ்த்தினர்.

தொழில் துறையில் செய்யப்பட வேண்டியன ஏராளம்—இவர்கள் அமெரிக்கா சென்று பயிற்சி பெற்றுத் திரும்புவது, தமிழகத் தொழில் வளர்ச்சிக்கு உதவும் என்ற நம்பிக்கை, கருமுத்துவுக்கு மகிழ்வூட்டிற்று.

செல்வக் குடும்பத்தில் பிறந்தும் செல்வம் தரும் சுகானுபவத்தில் மூழ்கிடாமல், தொழில் திறம்பெற அமெரிக்கா செல்லும், அந்த நால்வர் பெயர்,

**ஆர். இராமச்சந்திரன்**
**எஸ் இராமச்சந்திரன்**
**கே. ரமேஷ்**
**கே. சுரேஷ்**

சுரேஷ்! ரமேஷ்!—வங்காளிகளோ? என்று ஐயுறுவர்.

நால்வரும், மதுரையம்பதியைச் சார்ந்தோரே!

தென்னாட்டில் இன்று தொழிலதிபராக **விளங்கும் டி வி. சுந்தரம் ஐயங்கார் குடும்பத்துக் கொழுந்துகள் அமெரிக்கா செல்கின்றன; அகோபில மடத்துக்கு அல்ல!!**

தாத்தாச்சாரியார், கோயில் மண்டபத்திலே, கோவெனக் கதறிக்கொண்டு நிற்கிருர், வேதம் கற்பவர் தொகை வரவரக் குறைகிறது என்று; டி. வி. எஸ். குடும்பத்திலிருந்து கிளம்புகிருர்கள், அமெரிக்காவுக்கு மோட்டார் தொழிலின் நுணுக்கங்களைக் கற்றுவர!!

'வர வரக் குறைகிறது' என்கிருரே, குறையாமல் என்ன செய்யும், இதோ இந்த நால்வர். எங்கு செல்கிருர்கள்?

> பாரத்வாஜர் ஆசிரமத்துக்கு அல்ல; அமெரிக்காவுக்கு!!
> மான் தோல்மீது அமர்ந்து, மனனம் செய்வதற்கு அல்ல; தொழிற்சாலைகளில் நுழைந்து, நுணுக்கங்களை அறிந்துவர!
> 'சமித்து' பொறுக்கிவந்து கொடுத்துவிட்டு, 'சந்தியாவந்தன' மேன்மைபற்றி அறிய அல்ல; பாய்லர் எப்படி வேலைசெய்கிறது, ஜெனரெடர் எப்படி அமைக்கப்படுகிறது என்பன போன்ற நுணுக்க அறிவு பெற!

தாத்தாச்சாரியார்கள் தடுத்திட முடிகிறதா!!

'டி. வி. எஸ். குடும்பத்தினர், தமிழ் நாட்டில் ஒரு பெரிய மோட்டார் தொழிற்சாலையைத் தொடங்கி நடத்தி வரலாம். அவர்கள் தொடங்கினுல் வெற்றியுடன் நடக்கும் என்பதில் ஐயம் இல்லை"

என்று தியாகராசனர், கூறுகிருர்; எதிர்காலத் திட்டம இதுவாகத் தான் இருக்கும் என்ற யூகத்தால்.

இங்ஙிலை நோக்கி பார்ப்பன குலத்தவரே சென்று கொண்டிருக்கும்போது, மண்டப மாநாடுகளிலே கூடி நின்று, வேதத்தின் அருமை, பெருமை, மகிமை பற்றிப் பேசுவது எற்றுக்கு'!

✶

### மறைவு

நமது நண்பரும் தி. மு. க. முன்னணித்தோழர்களில் ஒருவரான தோழர் கி. மனோகரன் எம். ஏ-வின் அருமைத் தந்தை திரு. கிருஷ்ணன் வைத்தியர் அவர்கள் 19-8-56-ஞாயிறன்று இரவு 2-மணிக்கு நெய்யாற்றங் கரையிலுள்ள இல்லத்தில் இயற்கை யெய்திய சேதியை அறிய மிகவும் வருந்துகிறோம்.

# பேச்சு...பிரமாதம்!

உணவு பற்றாக் குறையைப் போக்கிவிட்டோம் — **என்கின்றனர் காங்கிரஸ் தலைவர்கள்.**

அன்னிய நாடுகளிடம் 'அன்ன தானம் கேட்கமாட்டோம் — பாரதம் பஞ்சத்தில் இல்லை! உணவுப் பொருள் தேவையான அளவுக்கு விளைந்து, களஞ்சியத்தில் குவிந்துவிட்டிருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டம் என்ன சாதித்தது? என்று கேட்கும் அறிவிலிகாள்! உணவுப் பிரச்சினையை வெற்றிகரமாகச் சமாளித்துவிட்டோம்—இது ஒன்று போதாதா பெற்ற வெற்றியைக் காட்ட என்று பிரதாபம் பேசுகின்றனர் பெரும் தலைவர்கள்—பின்னணி பாடுகிருர்கள் பிரச்சாரகர்கள்.

**டில்லி சர்க்கார், இந்த ஆண்டுக்கு மட்டும், வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள் வாங்குவதற்கு 80கோடி ரூபாய்க்கு மேல் செலவிட, லோக சபையின் அனுமதியைக் கேட்டிருக்கிறது.**

உணவு பற்றாக்குறை இல்லை! தேவையான அளவு குவிந்து கிடக்கிறது, ஐந்தாண்டுத்திட்ட வெற்றி, என்ற பேச்செல்லாம் என்ன ஆயிற்று?

**80-கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்து வெளிநாட்டில் உணவு வாங்கப்போகிறீர்களே!!**

"இந்நாட்டில் நமக்குப் போதிய உணவு உற்பத்தியாவது மட்டுமில்லை; இத்தேவைபோக உபரியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நிலையையும் அடைவோம்" என்று நேரு பண்டிதரே சொன்னர்.

எனினும், 80-கோடிக்கு வெளிநாட்டுக்குப் பணம் போகப் போகிறது.

அப்படியானுல், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்தி விஷயத்தில் வெற்றி கிட்டியதாகக் கூறியது, ஊரை ஏமாற்றத்தானு?

★

# "நாளை என்ன வருமோ!"

குஜராத் இப்போது குமுறும் எரிமலையாகிவிட்டது! உலக உத்தமர் காந்தியடிகளைத் தந்த குஜராத், இரும்பு மனிதர் பட்டேலின் கோட்டம், இப்போது செங்குருதி சிந்துகிறது—காங்கிரசுக்கே சவால் எழுப்புகிறது!! காந்தியடிகளின் 'சபர்மதி' எனும் புகழ்பெற்ற கலாசிரமம் ஆமதாபாத்துக்கு மூன்று கல் தொலைவில் தான் இருக்கிறது. எனினும், ஆமதாபாத், அலங்கோலக் காடாகி இருக்கிறது! குஜராத்தியருக்குத் தனி அரசமைப்பு இல்லையா என்று முழக்கம் எழுப்புகின்றனர்—குஜராத் மக்கள்!! "ஒரே இந்தியா" மந்திர மொழி பயன்படவில்லை.

---

**ஆக- 6:** மராட்டியம், சௌராஷ்டிரம், கட்சு, குஜராத், விதர்ப்பம், மாரத்வாடா, பம்பாய் நகரம் இணைந்த பெரிய ராஜ்யம் அமைக்க டில்லி மூலவர்கள் முடிவு செய்தனர்.

★

**ஆக- 7:** பார்லிமெண்டில் இந்த முடிவு தெரிவிக்கப்பட்டது. நேரு, ஒரு தலைவலி தீருமென நினைத்தார்.

★

**ஆக- 8:** ஆமதாபாத்தில் சர்க்கார் சுட்டார்கள். ஊரடங்குச் சட்டம் அமுல்.

★

**ஆக- 9:** யோசனை, சட்டமாக்கப்பட்டது. 241 பேர் ஆதரவும் 40 பேர் எதிர்த்தும் ஓட்டளித்தனர், பார்லிமெண்டில்.
ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.
மாலை மணி 3க்கு, போலீசார் போதாதென்று கருதி, இராணுவம் அழைக்கப்பட்டது. தொழிலாளர்கள் பகுதிகளில், வெளியே வந்தோர் மீது சுடப்பட்டது.
பரோடா, ராஜ்கோட் போன்ற பல பகுதிகளிலும் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டது.

★

**ஆக-10:** ஊரடங்குச் சட்டம் மீண்டும் பிறப்பிக்கப்பட்டது. இன்று நாலாவது நாள்! துப்பாக்கி முழங்கிற்று. வெளியூர்களிலும் ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டது.

★

**ஆக-11:** தொடர்ந்து மீண்டும் ஊரடங்கு உத்தரவு அமுல். துப்பாக்கிகள் பல தடவைகள் முழங்கின.
ஆமதாபாத் மேயரும், கவுன்சிலர்களும் ராஜினமா.

★

**ஆக-12:** ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது. ஆனால் 144 தடையுத்தரவு நீடித்தது.
பெண்கள் ஊர்வலத்தின் மீது கண்ணீர்ப்புகை உபயோகிக்கப்பட்டது.
டில்லியின் தீர்ப்பை எதிர்த்து நேருவுக்கு 25,000 தபால் கார்டுகள் அனுப்பப்பட்டன.

★

**ஆக-13, 14:** ஊரடங்குச் சட்டம் மீண்டும் அமுலாக்கி தொடரப்பட்டது.

★

**ஆக-15:** சுதந்திர நாளிலும், ஊரடங்குச் சட்டம்.

★

**ஆக-16:** ஆமதாபாத்தைச் சேர்ந்த இரண்டு காங்கிரஸ் எம். எல். ஏ. க்கள் ராஜினமா.
எச். வி. காமத் கைது.

★

**ஆக-17, 18:** ஊரடங்குச் சட்டம் நீடிக்கிறது.
மீறிய கம்யூனிஸ்டுத் தலைவர் ஏ. கே. கோபாலன் கைது,

**ஆக- 6, 7:** 'ஒப்போம்! ஒப்போம்!", என்று உடனே ஒரு அறிக்கை வெளியிட்டனர் குஜராத் தலைவர்கள். இவர்கள் காங்கிரசின் பெரிய தூண்கள்!

**ஆக- 8:** தலைவலி போய் புதிய வலி வந்தது! ஆமதாபாத்தில் முடிவு கேட்டதும் ஆத்திரம் அலைபுரளலாயிற்று. நகர காங்கிரஸ் மாளிகையை மக்கள் சூழ்ந்துகொண்டனர், 10,000 மாணவர்கள், கல்லூரிகளுக்குப் போகவில்லை.
காங்கிரஸ் மாளிகை தாக்கப்பட்டது.

**ஆக- 9:** ஆமதாபாத், எரிமலையாயிற்று.
ஆலைத் தொழிலாளர்களும் கிளம்பினர். மொத்தம் 12 பேர், தரையில் உருண்டனர் பிணமாக! "இருநூறு" பேருக்கு மேல், படுகாயமடைந்தனர்.
காங்கிரஸ் எம். எல். ஏ. யின் மகன் படுகாயமடைந்தார். வீட்டு மாடியில் நின்றுகொண்டிருந்தபோது குண்டு பாய்ந்தது!

**ஆக-10:** 12 வயதுப் பையன் மாண்டான். காந்தியார் முதல் முதல் கண்ட ஆசிரமமும் தாக்குதலுக்கு ஆளாயிற்று! மக்களைக் கலைக்க அங்கும் கண்ணீர்ப்புகை. நாடெங்கும் அர்த்தாலும், கண்டன ஆர்ப்பாட்டங்களும் நிற்கவில்லை.

**ஆக-11:** மக்களின் ஆவேசம் அடங்கவில்லை. இரு மந்திரிகளின் வீடுகள் தாக்கப்பட்டன. ஒருவரின் மகனை மாடியிலிருந்து இழுத்து எறிந்தனர்! கதர்க் குல்லாய்களைக் கண்ட இடம்தோறும் பிடுங்கி எறிந்தனர். பவநகர் பகுதியிலும் ஆர்ப்பாட்டம் பரவியது.

**ஆக-12:** மாணவர்கள் கருப்புக்கொடி ஊர்வலம். காங்கிரசாட்சியின் துப்பாக்கிப் பிரயோகத்தால் மாண்டவர்களுக்கு மரியாதை தினம். 18 வயது மாணவனின் பிரேத ஊர்வலம் நடைபெற்றது.
மாதர் திலகங்களும் போராட்டத்தில் ஈடுபடலாயினர். கருப்புடை அணிந்து, வீட்டை விட்டுக் கிளம்பி, ஊர்வலமாகச் சென்றனர்!
வீட்டுக்குள் ஐந்து நாட்களாக ஊரங்குச் சட்டத்தால் அடங்கிக்கிடந்தோரெல்லாம், மாடியிலும் வீட்டோரத்திலும் நின்றுகொண்டு முழக்கங்கள் எழுப்பினர்!
ஆயுதந்தாங்கிய போலீசார் வீட்டுக்குள் நுழைந்து குழந்தைகளையும் பெண்களையும் இழுத்துப்போட்டு அடித்தனர்.

**ஆக-13, 14:** நிலைமை அப்படியே இருக்கிறதே ஒழிய குறையவில்லை.

**ஆக-15:** கல்லூரி மாணவனான தன் மகனை இழந்த 35 வயதுள்ள மாதா நடுங்கும் கைகளால் தேசீயக்கொடி ஏற்றினர்! கண்ணீர் வழிய வழிய, "18 வயதுள்ள என் மகன் சுரேஷ் செய்த தியாகம் நிச்சயம் வீண் போகாது," என்று கூடியிருந்தோரிடம் கூறினர், மக்கள், இலட்சியத்தை அடையும் வரையில் அயரோம் எனச் சபதம் பூண்டனர்,

---

இந்தச் சூழ்நிலையில் 19ந் தேதி டில்லியின் முடிவினை ஏற்றுக்கொள்வது பற்றி ஆலோசிக்க கூர்ஜர மாகாண காங்கிரஸ் கமிட்டி கூடிற்று. தடைகள் தளர்த்தப்பட்டன. ஊரடங்குச் சட்டம் வாபஸாயிற்று, ஆனால், மக்களும் மாணவமணிகளும் ஊரடங்குச் சட்டம் போட்டு, 'இன்று யாவரும் வெளியே போவதோ, மாலையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதோ கூடாது! என்றனர்.

மாலையில் முதலமைச்சர் மொரார்ஜிதேசாய் பேசுவதற்காக, காங்கிரஸ் கமிட்டியால் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது! மகா கூர்ஜர சமிதியால் 'ஊரடங்கு வேண்டுகோள்' விடுக்கப்பட்டது!!

ஒருவர்கூட, காங்கிரஸ் கூட்டத்துக்குப் போகவில்லை! மனந் துடித்த மொரார்ஜிதேசாய் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்!!

டில்லியின் முடிவை கூர்ஜரம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக மொரார்ஜி உண்ணாவிரதம் இருக்கிறார்! அதே சமயத்தில், டில்லியின் முடிவு அநீதி என்று கூறி 226 மாணவர்கள் ஆமதாபாத் சட்டக் கல்லூரியில் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்!!

நாளை, என்ன வருமோ.........?

# உலக அரங்கில்

## பர்மா

✶

"முதல் மந்திரிப் பதவி இடையூருக இருக்கிறது. அதை விட்டு விட்டுக் கட்சியை வளர்ப்பதிலும், கரையான்களை அகற்றுவதிலும் ஈடுபடப் போகிறேன்," என்று அண்மையில் பதவியைத் துறந்த நூ, இந்தக்கிழமை வெற்றிகரமாகப் பின் வாங்கி விட்டார்! "கட்சியைக் காப்பாற்ற என் ஒருவனுல் மட்டும் முடியாது. பலர் சேர்ந்து செய்யவேண்டிய காரியம். ஆகவே, இப்போது கட்சியின் தலைவனுக இருப்பதிலிருந்தும் விலகிக்கொள்ளப் போகிறேன்," என்று அறிவித்திருக்கிருர். நேருவுக்கு நண்பர் இவர்!

✶

## கேரளம்

✶

நேருவால், பொன்னும் பொருளும் நூ காலத்தில் பர்மாவுக்கு வழங்கப்பட்டதுண்டு! ஆனுல் பர்மாவிடமிருந்து சிறு விஷயத்திலும் 'உதவி' பெற முடியவில்லை, டில்லியால். முன்பெல்லாம் கேரளத்திலிருந்து பர்மாவுக்கு ஏராளமான 'இரால்' மீன் வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்ததுண்டு. இதனுல், கேரளத்து பரதவர்களுக்கு, தொழில் நன்ருக நடந்தது. பர்மா, திடீரென இந்த மீன் வகைகள் பர்மாவுக்கு வரக்கூடாது எனத் தடைவிதித்தது. அதனுல், ஏராளமானவர்கள் கேரளத்தில் தொழிலில்லாமல் திண்டாடுகிருர்களாம்! இதற்கு ஏதாவது வழி செய்ய முடியுமா என்று டில்லி சபையில் கேட்டபோது வியாபார மந்திரி "முயற்சிக்கிறேம்" என்று மொழிந்துள்ளார்.

✶

## பாகிஸ்தான்

✶

எங்கெங்கே கடன் வாங்கலாம் என்று அலையும் நேரு சர்க்கார், புயலாலும் வெள்ளத்தாலும் நாம் அவதிப்படும்போது கூட, 'அனுக்ரகிக்க' மறுக்கும். ஆனுல் தன்னுடைய 'பெருந்தன்மை'யை வெளிநாடுகளின் விஷயத்தில் காட்டிக்கொள்ளும் போது மட்டும் காசு பணம் பற்றிக் கவலைப் படுவதில்லை! உதாரணமாக, இதுவரை, பாகிஸ்தானில் ஏதாவது ஒரு சிறு வெள்ளம், பூகம்பம் என்ருலும் நேரு உடனே பணமளிக்கத் தவறியது இல்லையாம். 'காஷ்மீர்', இன்னும் முடிவாகவில்லை! கருத்தில் எரிச்சலும், அடங்கியதாகத் தெரியவில்லை!! ஆனுல், தன்னுடைய நல்லெண்ணத்தைக் காசுகளைக் கொண்டு வாங்கிவிடலாம் என்று கருதியதாலோ என்னவோ இதுவரை பல தடவைகள் 'நன்கொடை'கள் அளித்தாராம். ஆனுல், திருப்பி, ஒரு தடவையாவது பாகிஸ்தான் செய்ததோ என்ருல் கிடையாதாம்! இதைச் சொல்லி, ஒப்பாரி வைத்திருக்கிருர். நேரு! "கெட்டிக்காரன் தன் காரியத்தைப் பார்ப்பான்-வீம்பும் வீண்பெருமையும் விரும்புகிறவன் அழித்துவிட்டு அலைவான்." அதுதான் நினைவுக்கு வருகிறது. 1954–56ல் மட்டும் ரூ. 28,64,400 நன்கொடையாகப் போயுள்ளதாம், பாகிஸ்தானுக்கு.

✶

## மொனகோ

✶

ஒரு குழந்தையால் ஒரு அரசு காப்பாற்றப்பட்டு விட்டது! பிரெஞ்சின் மேற்பார்வையின்கீழ் இருந்து வரும் மொனகோ எனும் சிறு நாடு, மன்னன் ரெய்னியர், கடந்த ஆண்டு கிரேஸ் கெல்லி எனும் பிரசித்திபெற்ற அமெரிக்க நடிகையைத் திருமணம் செய்துகொண்ட போது மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தது. காரணம், அரசனுக்கு வமிசாவளி இல்லையென்ருல் மொனகாவைப் பிரான்சு எடுத்துக் கொண்டு விடும்! அந்தப் பயத்துக்கு இனி வழியில்லை. ஏனெனில், ரெய்னியருக்கும் கிரேஸ் கெல்லிக்கும் அண்மையில் ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது. செய்தி கேட்டு மொனகோ மக்கள் குதூகலமாகக் கொண்டாடினராம். அந்நிய ஆதிக்கத்தின் மீது அவ்வளவு வெறுப்பு!

✶

## நேபாளம்

✶

நாரதமுனி துலங், அவரது பெயர்! நேபாளத்துக்கு பாதுகாப்பு மந்திரியாக இருந்தார். தன்னுடைய பதவியைப் பயன்படுத்திப் பணம் சம்பாதிக்க முயன்ருர் என்று இவர்மீது சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு நடைபெற்றது. குற்றம் ருசுப்பிக்கப்பட்டு இவருக்கு இரண்டு ரூபாய் தண்டனை அளிக்கப்பட்டது.

✶

## இந்தோனேஷியா

✶

பிரிட்டனில் சூயஸ் குறித்து நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்ள இந்தோனேஷியாவின் வெளிநாட்டு மந்திரியான அப்துல்கனி கிளம்ப இருந்தார், அந்தச் சமயத்தில் அவரை விடாமல் பிடித்துக்கொள்ள படையுடன் வந்தார் கவில்ராங் எனும் இராணுவத் தளபதி! ஏன் என்று கேட்டபோது, 'அமைச்சர்மீது இலஞ்சம் வாங்கிய குற்றம் இருப்பதாக இலஞ்ச இலாகாவினர் கண்டுபிடித்திருப்பதாகவும், அதனுல் அவரைக் கைது செய்ய இராணுவ மேலதிகாரி உத்தரவு இட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இலஞ்ச ஊழல் சம்பந்தமாக, இராணுவத் தலைவரான அப்துல் ஹாரிஸ் ஆஷன் என்பவர், எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள அதிகாரம் இருக்கிறதாம். இலண்டனுக்குப் புறப்பட வேண்டும் அப்துல்கனி! நிலைமையோ இப்படி. விஷயம் பிரதமர் அலிக்கு எட்டவே, அவர் ஓடோடியும் வெளிநாட்டு மந்திரியின் மாளிகைக்குப்போய், இராணுவ அதிகாரிகளிடம் "பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லி, மந்திரியை விடுவித்து, இலண்டனுக்கு அனுப்பியிருக்கிருர்!

★

REGD. NO. M. 4642 போன் நெ. 15

# மர்மக் கைதி

42 ஆண்டுகள்—முகம் மூடிக்கிடப்பதென்பது... அம்மவோ... நினைக்கவும் நெஞ்சம் திடுக்கிடுகின்றது. கணநேரம் கண்மூடிக் கிடப்பதே சிரமம் என்றால் காலமெல்லாம் காரிருளில் கிடக்கும் நிலையை என்னென்பது.

சமயத்தின் பெயரால்சர்க்காரில் இடம் பெற்ற ரிஷ்லுவுக்குப் பிறகு பிரெஞ்சுநாட்டு அரசியலில் கார்ட்டினல் மஜாரின் என்பான் செல்வாக்கு உயர்ந்து ஓங்கி இருந்தது. 1661–ஆம் ஆண்டில் மஜாரின் மரணமடைந்த சில திங்களில் முகம் முற்றும் மூடிமறைத்த வகையில் கைதி ஒருவன் பிரெஞ்சுநாட்டுத்துறைமுகம் ஒன்றில் கலம் ஏற்றப்பட்டான். அவன் கொண்டு சேர்க்கப்பட்ட இடம் மத்தியதரைக் கடல் பிரதேசத்தைச் சேர்ந்த தீவு ஒன்று. வழியில் எங்காவது எப்போதாவது தான் யார் என்று கைதி கூறினாலும், குறிப்பால் உணர்த்தினாலும் அவனைக் கொன்றுவிட வேண்டும் என்பது காவலர்களுக்கு இடப்பட்ட கட்டளை. பெயர்தான் கைதியே தவிர, அவன்பெற்றிருந்தசலுகைகள் பலவாகும். உயர்ந்த வேலைப்பாடு அமைந்த மேசை நாற்காலிகள்; விலைமிக்க பாத்திரங்கள், கீதம் இசைத்து மகிழ இசைக்கருவிகள் இவை எல்லாம் அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தன.

சிறைக்கோட்டத்தின் தலைமை அதிகாரியே நேரில் வ்ந்திருந்து உபசரித்து உண்ணச் செய்வானும், கைதி உட்கார அனுமதி தந்தால்தான் அதிகாரி உட்காருவதாம். சிறை அதிகாரி மட்டும் என்ன, பதினான்காம்லூயிமன்னனின்முதல் அமைச்சனே அந்த அதிசயக் கைதியின் முன்னிலையில் அமர்ந்தது கிடையாதாம்.

பணிவானசொல்; பக்குவமான உபசரிப்பு, ஆடம்பரமான வசதிகள், இவை எல்லாம் இருந்தன, அனுமதிக்கப்பட்டன அந்தக் கைதிக்கு. ஆனால் தான் யார் என்பதனை மட்டும் மற்றவர் அறியாமல் மூடிமறைக்க வேண்டும், அறிவிக்க முயலுவதும் ஆபத்து விளைவிக்கும் என்று எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

முகமுடியைக் கழற்றாமலே வாயைத் திறந்து உண்ணும் வகையில் முகமூடியில் எற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்.

இந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளில் தப்பித்துக் கொள்ளவோ, தன் பெயர் கூறவோ முயற்சி செய்யாமற் கிடந்தவன் ஒரு முறை—ஒரே ஒரு முறை மட்டுமே—வெளிஉலகுடன பிறர்அறியாமல்தொடர்பு கொண்டான். மத்திய தரைக் கடல் தீவு ஒன்றில் சிறை கிடந்த போது வெள்ளித் தட்டு ஒன்றில் ஏதோ சில சொற்களைக் கத்தியால் கீறி, சிறையிலிருந்து வெளியே வீசிஎறிந்தானாம். சிறையை ஒட்டினாற்போல் சென்றுகொண்டிருந்த படகில் வீழ்ந்தது அது. எழுத்துவாசனை இன்னது என்று அறியாத அந்தப்படகோட்டி 'என்னவோ ஏதோ' என்று அதனைக் கொண்டுபோய் சிறைத் தலைவனிடம் தந்தான். அதைப் பெற்ற சிறைத் தலைவன் என்ன நடவடிக்கை எடுத்தான் என்பதே தெரியவில்லை. 1703-ம் ஆண்டு அந்தக்கைதி இந்த இக்கட்டிலிருந்து விடுதலை பெற்றான். ஆம்! விடுதலைதான், சிறையில் இருந்துமட்டுமல்ல; உலகில் இருந்தே விடுதலைபெற்றான். செத்துவிட்டபிறகும் அவன் முகம் மறைக்கப்பட்டு மர்மமாகத்தான் இருந்தது. நள்ளிரவில் அடக்கச் சடங்கு நடந்தது. அந்தச் சடங்கிலும் அவன் மர்மம் துலக்கப்படவில்லை.

உள்நாட்டு அமைச்சராக இருந்த சாமிலார்ட் என்பவர் மரணப்படுக்கையில் இருந்தபோது, அவன்மருமகன் அருகமர்ந்து மண்டியிட்டுக் கேட்டான். "அந்தமனிதன் யார்?" என்று. ஆனால் அமைச்சரோ "சொல்லக்கூடாது; மாட்டேன்; அது அரசாங்க இரகசியம்" என்று சொல்லி உயிர் துறந்தார். அந்த இரகசியத்தை அறிந்திருந்த கடைசி ஆளும் அவர்தானும்.

அந்த 'மர்மவீரன்' யாராக இருக்கும் என்று எவரெல்லாமோ என்னவெல்லாமோ 'ஆருடம்' கூறினர். 'மஜாரின்தான் அந்த மனிதன்' என்றும் கூறினர்.

அவன் இறந்து இருநூறாண்டுகளுக்கு மேலாகின்றன. அவன் யார் என்றோ, அந்தக் கடுந்தண்டனை அடையக் காரணம் என்ன என்றோ இதுவரை கண்டறிந்த வரலாற்று ஆசிரியர்கள் கிடையாது. அவன் யாரோ?

★

காஞ்சீபுரம் 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்,
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால், அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.